## அதிகாரம் 12

# விசுவாசத்தின் தலைசிறந்த வல்லமை

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய பெரிய ஊழியர்களைக் கருத்தில் கொள்ளப்பட்டபின் (அதிகாரம் 11), அடுத்ததாக எபிரெயர்கள் தற்போது பின்பற்றுகிற காரியங்கள் பக்கமாக எபிரெயரின் ஆசிரியர் திரும்புகிறார். ஜெயம், நெருப்பு, மற்றும் பாடுகளினாலான விசுவாசம் மூலம் நடந்தவர்களிடமிருந்து அவர்கள் தைரியம் பெற்றனர். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது விசுவாச நடக்கையாக இருந்தாலும்கூட, இங்கே ஒரு பந்தைய ஓட்டத்தின் சித்திரமாக இருக்கிறது. உண்மையான சகிப்புத்தன்னையுள்ளவர்களாக இருத்தல் என்ற கடந்த காலத்தின் விசுவாச நாயகிகள் மற்றும் நாயகர்களின் மூல குணாதிசயமாக இருந்ததும் மற்றும் இந்தக் கிறிஸ்தவக் காலத்திலும் அது இருக்கிறதாகவும் காணப்படுகிறது. கிறிஸ்துவின் சகிப்புத்தன்மையே நம்முடைய கூர்நோக்காக இருக்க வேண்டும்.

## நம்முடைய விசுவாசத்தின் பரிபூரணர் கிறிஸ்துவே (12:1-3)

**[1]ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; [2]அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். [3]ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.**

**வசனம் 1.** இந்தப் **பந்தையமானது** நித்தியமான பலன்களைக்

கொடுக்கிறதாக இருக்கிறது, அதனால் நமக்கு எதுவும் தடையாக அனுமதிக்கக் கூடாது. விசுவாசத்தின் ஓட்டம் என்பது உணர்ச்சிவசப்படுவதை விடவோ அல்லது சில "அனுபவத்தின்" காரணமாக இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்பதையும்விடவோ மேலானது ஆகும். இது ஒரு செயல்பாட்டின் வாழ்க்கையாகும், அதாவது மிகவும் கடினமான ஓட்டப்பந்தையமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.[1] அதேவேளையில் கிறிஸ்தவ ஓட்டப்பந்தையம் அருமையானதும் மற்றும் சிலவேளைகளில் தொடர்ந்து ஓடுவதற்குக் கடினமானதாகவும் காணப்படுகிறது.

வசனம் 1-ல் **ஆகையால்** (τοιγαροῦν, *டொய்கரௌன்*) என்று குறிப்பிடுவது மூலம் கடந்த பகுதிகளில் ஆராயப்பட்ட விசுவாசமுள்ள நபர்களுடைய உதாரணங்களின் அடிப்படையில் முடிவுரையை வடிவமைக்கப்பட்டுள்ளதையே இது காட்டுகிறது.

*மார்டஸ்* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து (μάρτυς, *மார்ட்டியர்*) **சாட்சிகள்** (இரத்த சாட்சிகள்) என்ற ஆங்கில வார்த்தை வந்தது. புதிய ஏற்பாட்டில் மார்ட்டியர் என்பதற்கு விசுவாசத்திற்காக மரித்தவர்கள் என்று பொருளாகாது. ஆயினும், இது ஒரு குறிப்பிட்ட திசையில் முன்னேறுவதன் துவக்கமாக இருக்கிறது, மற்றும் இது மூன்றாம் நிலை நாடுகளில் இந்தக் கருத்து நிலவுகிறது.[2] தன் விசுவாசத்திற்காக மரித்த முதல் சீஷன் என்பதிலிருந்து சாட்சிகள் (இரத்த சாட்சிகள்) என்ற சிந்தனை வரையப்படுகிறது: அப்போஸ்தலர் 22:20 நினைவுக்குக் கொண்டுவருவது என்னவென்றால், "உம்முடைய *சாட்சியாகிய* [*martus*] ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது" (முக்கியத்துவப்படுத்துகிறது). அந்திப்பா குறிப்பிடப்பட்டுள்ள இடம் வெளிப்படுத்தின விசேஷம் 2:13ல் "உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள *சாட்சியான* [*martus*] அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை" (முக்கியத்துவப்படுத்துகிறது). சாட்சி என்பது மார்டிடம் (இரத்த சாட்சிகள்) என்ற கருத்தைக் கொண்டிருக்குமானால், அந்த வாக்கியம் பொருள் பொதிந்ததாகக் காணப்படும். வெளிப்படுத்தின விசேஷம் 17:6ல் "இயேசுவினுடைய *சாட்சிகளின்* இரத்தத்தினாலும்" (முக்கியத்துவப்படுத்துகிறது) என்னும் வாக்கியத்தில் *மார்டஸ்* (இரத்த சாட்சிகள்) என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. பிறகு இந்த வார்த்தைக்கு மார்டியர்ஸ் (இரத்த சாட்சிகள்) சரியில்லாத பொருளாக இருக்கிறது என்பதைக் KJV உணர்த்துகிறது.

*மார்டஸ்* எனும் வார்த்தையானது, பார்வையாளர் என்ற பொருளில் ஒருபோதும் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை,[3] "அரங்கத்தில்" பார்வையாளர்கள் என்னும் சிந்தனையைத் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.[4] அதிகாரம் 11-ல் தனிநபர்களின் பெயர்களைக் காணும்படிக்கு, பந்தயத்தில் ஓடுபவர்களுக்கு,

பார்வையாளர்கள் கூவி உற்சாகப்படுத்தும் யோசனையாகப் பரிந்துரைக்கிறது, ஆனால் தனிப்பட்டவிதமாகப் பேசுகிறேன், வாக்கியத்தில் இந்த எண்ண நோக்கமே கிடையாது. நிற்பவர்களிடமிருந்து சத்தம் வரவே இல்லை, மாறாக, விசுவாச மாதிரிகளின் சாட்சிகளே வசனங்களில் வழங்கப்பட்டுள்ளன. "குறையாத உயர்ந்த விசுவாசத்தினாலும், மற்றும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் ஜெயித்ததனால் (காண்க வெளி. 12:11)"[5] அவர்களுடைய வாழ்க்கை சாட்சியாகியது. முடிவுபரியந்தம் உண்மையாயிருக்கும்படிக்கான சாத்தியங்களை ஏற்படுத்தும்படிக்கு, சாட்சியையும் உற்சாகத்தையும் வழங்கி - ஆபேல் போன்றவர்களை - "சாட்சியாக" (μαρτυρέω, *மார்டரியோ*) உருவாக்கினார்.

அதிகாரம் 11-ல் உள்ள பெயர்கள் நோக்கப்படுவதற்காகவும் மற்றும் உற்சாகப்படுத்தும் விதமாகத் தோன்றுகிறவைகள் நிகழ்காலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள, **மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறவைகளால் நம்முடைய இருப்பு சூழப்பட்டுள்ளது**. ஆயினும், கடந்த கால விசுவாச மக்களின் பார்வையாளர்களாக இந்நிருபத்தின் வாசகர்கள் உள்ளனர், வசனத்தின் மூலம் அவர்களுடைய விசுவாசத்தைக் காண்கின்றனர். பலவீனங்களின் மத்தியிலும் அவர்களுடைய வெற்றியானது, கஷ்டப்படும் கிறிஸ்தவர்கள் பின்பற்றுவதற்கான மாதிரிகளாக உள்ளன.

கிறிஸ்தவ வாழ்க்கையை, ஒருவன் விதிமுறைகளின்படி ஓடுகிற பந்தையத்திற்கு ஒப்பாகப் பவுல் அடிக்கடி சித்தரிக்கிறார் (காண்க 1 கொரி. 9:24; 2 தீமோ. 2:5). எபிரெய ஆசிரியர் தனது வாசகர்களை விளையாட்டு அரங்கிலுள்ளவர்களாக உருவகப்படுத்துகிறார், அங்கே அவரைத் தனது நேரத்தை கழிக்கும் ஒரு வாலிபனாக நாம் கற்பனை செய்துகொள்ள முடியும். 10:36-ல் அவர் தன் மனதை ஆழ்த்தியிருக்கலாம், அவரை முடிவு வரைக்கும் ஓடுவதற்கேதுவான விடா முயற்சியின் **சகிப்புத்தன்மையை** (ὑπομονή, *ஹப்போமேனே*) அது பரிந்துரைக்கிறது. கிரேக்க ஆதிக்கத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பலவிதமான விளையாட்டுகள் யூதேயாவிற்கும்கூடப் பழக்கத்தில் உள்ளதாக இருந்தது. பெரும்பாலான கிரேக்க விளையாட்டுகளில் சகிப்புத்தன்மையே போட்டியின் முதன்மையான தேவையாயிருந்தது.[6] பந்தையம் என்பதற்கான கிரேக்க வார்த்தை (ἀγών, *அகோன்*), அது ஆங்கிலத்தில் "அகோனைஸ்" என்றானது, அதன் பொருள் "பாடுகளின் தொடர்ச்சி" என்பதாகும். ஆம், கிறிஸ்தவப் பந்தையத்தின் பாடு என்பது பாவத்திற்கு எதிரானது ஆகும்.

**பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு**, என்பது ஓடுபவர் தனது பயிற்சியின்போது

பாரத்தைச் சுமந்து செல்வதைச் சித்தரிக்கிறது. பந்தையத்திற்கு அவசியமற்ற யாவற்றையும் அவர் தானே களைந்துவிடுவார். “பாரமானவை” (ὄγκος, *ஒகோஸ்*) ஓடுபவருக்குத் தடையாக இருக்கிற யாவற்றையும் குறிக்கும். **சுற்றி நெருக்குகிற** பொருளை வெளிப்படையாகக் காட்டுகிறது. மோசே போன்றவர்களை விளக்கப் படமாக்கப்பட்டுள்ளது, அவர் தேவனுடைய மகா மகிமைக்காக, இந்த உலகத்தின் மகிமை மற்றும் சுகபோகத்தையும் புறந்தள்ளினார் (11:24-26). நாமும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

“பாரமானவைகள்” (“பாரம்”; KJV) மற்றும் “பாவம்” (ἁμαρτία, *ஹமர்டியா*) யாவை? “புக்ரமானவை” என்பது நம்முடைய மெய்யான கூர்நோக்கிலிருந்து விலக்குகிற எதையும் குறிக்கும், “பாவம்” என்பது தேவனுக்கு வெளிப்படையாக விரோதமான ஒன்றாக இருக்கிறது.[7] இந்தப் பதமானது பாவத்தின் எந்தப் பாரமுமான இச்சை, பெருமை, ஒரு கிறிஸ்தவ ஓடுபவரை முடக்குகிற எந்த ஒரு காரியமும் இதற்குள் பொருந்தும். புருஸ் சொன்னார், “ஆக்கிரமிக்கும் பாவத்தையும் நம்முடைய ஆசிரியர் குறிப்பிடவில்லை, வாக்கியத்தில் பொதுவான பயன்பாடாக இருந்தாலும், அது பாவத்தையே குறிப்பிடுகிறது, ஓடுபவரின் பாதங்களை ஓடவிடாமல் தடுக்கும் எந்த ஒரு காரியமும் இதில் அடங்கும் ...”[8] கிரியையுள்ள விசுவாசத்திற்கு எந்த ஒரு பாவமும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று புத்திக் கூருவது பொருத்தமான ஒன்றாக உள்ளது. மற்றவர்களின் பாவம் மட்டுமே அருவருக்கத்தக்கதாக இருக்கிறது என்ற சிந்தனைக்கு மத்தியில், நம்முடைய வாழ்வில் உள்ள பாவத்திற்கு எந்த ஒரு காரணமும் கூறமுடியாது. ஒவ்வொரு பாவமும் தேவனுக்கு முன்பாக அருவருப்பாக உள்ளது, தேவனுடைய கண்களுக்கு முன் எந்த ஒரு பாவமும் அற்பமானதாக இல்லை.

எபிரெயரில் அவிசுவாசத்தின் பாவமானது பெரியதாக இருக்கிறது என்று ஒரு எழுத்தாளர் கூருகிறார்.[9] அவிசுவாசம் என்பது தேவனுடைய வாக்குத்தத்தங்களில் உள்ள நம்பிக்கையின் குறைபாடே ஆகும். அவிசுவாசமானது விசுவாச பின்மாற்றத்திற்கு வழிநடத்தும், அது எபிரெயரின் முதல் வாசகர்களின் உண்மையான அபாயமாக இருந்தது (காண்க 6:4-6; 10:26-29). இது ஒரு தொடர் அழுத்தம் கொடுக்கும் சோதனையைத் தவிர்க்கும் விதமாக, சிலுவையைச் சகித்த கிறிஸ்துவின் கடிந்துகொள்ளுதலை பகிர்ந்துகொள்ள வேண்டும் (வசனம் 2).

**பொறுமையோடே ஓடக்கடவோம்** என்பது பொறுமைக்கும் மற்றும் விடா முயற்சிக்கும் விடும் ஒரு அழைப்பு ஆகும். ஓடுபவர் பந்தையத்தை முடிக்கவில்லையென்றால், அவர் எதிலும் வெற்றி பெறவில்லை. ஆகவே இது கிறிஸ்தவ வாழ்க்கையுடன் தொடர்புடையதாக இருக்கிறது. நன்மை செய்வதில் சோர்ந்து போவதினால் (கலா. 6:9), மற்றும் கிறிஸ்தவ ஓட்டத்தை முடிவுக்கு முன்பு ஓட்டத்தை

நிறுத்தினால், நித்திய மகிமையை நம்மால் பெற முடியாது. மகிமையைப் பெறும்படிக்கு குறுகிய ஓட்டம் போன்ற எதையும் நாம் கொண்டிருக்கவில்லை, ஆனால் கொடுமுடியை அடைவதற்குக் காலமும் முயற்சியும் பந்தயத்திற்குத் அவசியமாயிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அநேகர் சரீர அளவில் செயல்பட முடியவில்லையென்றாலும்கூட, இருதயத்தில் அவர்கள் தொடர்ந்து ஓடுகின்றனர். வயதான பரிசுத்தவான்கள் சோர்வு மற்றும் பலவீனத்தின் நிமித்தம் நின்றுபோன அருட்பணியை, அவர்களால் மீண்டும் தொடர்ந்து செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் சரீர பலம் குன்றிப்போகும்போது, அவர்களுடைய இருதயத்தில் உள்ளவற்றைத் தேவன் கணக்கிடுகிறவராக இருக்கிறார். (ஒப்பிடுக 1 இராஜாக்கள் 8:18.)

**வசனம் 2. விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற** இயேசுவை நோக்கி, இருப்பதே நம்முடைய மிகப் பெரிய உற்சாகமாகக் காணப்படுகிறது.[10] பாவம் செய்யும்படிக்கு தூண்டுகிற எந்த பாரத்தையும் மற்றும் சோர்வையும் கிறிஸ்து புறந்தள்ளினபடியால், அவர் நம்முடைய ஆசீர்வாதமான இரட்சகராக இருக்கிறார். இயேசுவின்மேல் தம் கண்களை வைப்பதன் மூலம் நாம் **தொடர்ந்து அவரைப் பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும்**. நோக்கம் (ἀφοράω, *அஃபோரவோ*) என்ற வார்த்தையின் யோசனை என்பது, உறுதியும் பற்றுதலையும் கொண்டிருத்தல் ஆகும். மற்றவைகளிலிருந்து நம்முடைய கண்களை விலக்கி, அவரில் நம் கண்களைப் பதியவைப்போம் - கர்த்தராகிய கிறிஸ்துவில் பதியவைப்போம்.[11] நம்முடைய வாழ்க்கைக்குப் பின்பற்றும் விதமாக ஒரு முறைமையான கிறிஸ்துவையே மாதிரியாக அவர் வைத்துள்ளார், அவருடைய போதனையும், வாழ்வும் பரிபூரணமாகவும் இருக்கின்றன. அவருடைய மாதிரி மூலம் நாம் பலத்தின் ஆதாரத்தைப் பெறுகிறோம், அவர் வருவதற்கு முன்பு அது தோன்றவில்லை. மற்ற இரத்த சாட்சிகளைவிட அவருடைய பாடுகள் மிகவும் பயங்கரமானதாக இருந்தது, ஆகையால் வாசகர்கள் தங்களால் பாரங்களைத் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கும்போது அவரை நோக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். "அவர்கள் கேலி செய்யப்பட்டதும், அலட்சியம் செய்யப்படவும், கொடுமைப்படுத்தப்படவும், புறக்கணிக்கப்படவும், ஒப்படைக்கப்படவும், சிறையிலடைக்கப்படவும், பொய் குற்றச்சாட்டப்படவும், கொல்லப்பட்டபடவும் கூடும் - ஆனாலும் அவரும் அப்படி இருந்தார்."[12]

வலதுபுறமாகவோ அல்லது இடதுபுறமாகவோ, மற்றும் பின்புறமாகவோ இல்லாமல் (லூக். 9:62), மாறாக, இயேசுவையே முன்நோக்குகிறவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய விசுவாசத்தின் "முன்னோடியாக"[13] அவர் இருக்கிறார், "புதியதும்

மற்றும் வாழ்க்கை வழிமுறைகளையும்" அவர் துவக்குகிறவராக இருக்கிறார் (எபி. 10:20). அவர் பரிபூரணராக இருக்கிறார், அதன் பொருள் பழைய உடன்படிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பின் நிறைவை அவர் கொண்டுவந்தார் என்பதாகும். பழைய ஏற்பாட்டினால் கொடுக்க முடியாத "பரிபூரணத்தை," அவர் நம்மில் கொண்டுவந்தார் (10:1). இயேசு நமக்கு விசுவாசத்தைக் கொடுத்து, பரிபூரணப்படுத்துகிறார் என்ற பொருளில் சிலர் புரிதலைக் கொண்டுள்ளனர். ஆயினும், தனிப்பட்ட விசுவாசம் தேவனால் கொடுக்கப்படுவது அல்ல. மாறாக, விசுவாசமானது தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது என்பதை வேதாகமம் குறிப்பிடுகிறது. விசுவாசமானது கிறிஸ்துவுக்குள் மட்டுமே பரிபூரணத்தை அடையமுடிகிறது, விசுவாசத்திற்கான உன்னத வெளிப்பாடாக அவர் இருக்கிறார்.[14] நம்முடைய விசுவாச நடக்கையில் பின்பற்றுவதற்கான பரிபூரண முன்மாதிரியாக அவர் இருக்கிறார்.

"விசுவாசம்" என்னும் வார்த்தைக்கு முன் வரும் "தி" என்ற ஆங்கிலச் சொல் என்பது கிரேக்க மொழியில் நம்முடைய விசுவாசத்தின் ஆதாரம் என்பதைப் பரிந்துரைக்கிறது. நோக்கம் கொண்ட "விசுவாச" அமைப்பைக் கொண்டுள்ளோம், ஒருவருடைய தனிப்பட்ட மற்றும் அக உணர்வினாலான விசுவாசத்தை கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. யூதா 3 சொல்கிறது, "*விசுவாசத்திற்காக* நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று" அதாவது "*விசுவாசமானது* பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்டதாக இருக்கிறது" (முக்கியத்துவப்படுத்தப்படுகிறது). "விசுவாசம்" என்பது கிறிஸ்தவர்களின் போதனையைக் குறிப்பிடுகிறது, அது எபேசியர் 4:5-ல் உள்ள ஒரே "விசுவாசம்" என்று காணப்படுகிறது.

புருஸ் எழுதுகிறார், "தேவனில் அது முழுமையான விசுவாசமாக இருந்தது, பார்க்கக்கூடிய மற்றும் உணரக்கூடிய எந்த ஆதாரங்களாலும் ஆதரிக்கப்படாமல், இகழப்படுதல், கொடுமைப்படுத்தப்படுதல், சிலுவையிலறையப்படுதல், மிகக் கொடூரத்தின் நிராகரிக்கப்படுதல், விட்டுப்போதல் கைவிடப்படுதல் போன்றவைகளால் கொண்டுசெல்லப்படுதல்."[15] அவர் தேவனில் கொண்டிருந்த விசுவாசத்திற்காகக் கேலி செய்யப்படும்போது, **அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்(து)தார்** (காண்க மத். 27:43).[16] பிதாவின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையை மையமாகக் கொண்டே அவருடைய முழு வாழ்க்கையும் அமைந்திருந்தது. கெத்செமனே தோட்டத்தில் இருக்கையில், அவர் தம்மையே முற்றிலும் தேவனுக்கு அர்ப்பணித்திருந்தார் (மாற்கு 14:36).

சிலுவையைக் குறித்த பொதுவான பார்வை அதிலிருந்து முற்றிலும் மாறிவிட்டது நாம் அரிதாய் கற்பனை செய்வது என்னவென்றால் சொரசொரப்பாகச் செதுக்கப்பட்ட ஒரு மரத்துண்டு கொண்டு

பாடுபடுவதும் மரிக்கப்படுவதும் மற்றும் எல்லா வித மக்களாலும் தாழ்மைப்படுத்தப்படுதலும், அவமானத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தூக்கு மரம், மின் இருக்கை, தலை துண்டிக்கும் இயந்திரம், நாசம் ஏற்படுத்தும் ஊசி மருந்து போன்ற கொடூர காரியங்களைவிட, மிகவும் கொடிய இரக்கமற்ற நிலையைக் கொண்டதாக இருந்தது. இது மிகவும் கொடிய குற்றவாளிகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. அம்மாதிரியான நபர்கள் "சபிக்கப்பட்டவர்களாக" எண்ணப்படுகின்றனர் (உபா. 21:22, 23; காண்க கலா. 3:13). கிறிஸ்து ஒரு குற்றவாளியாகத் தூக்கிலிடப்பட்டார், அது மரத்தில் மரித்தவருக்கு "சாபத்தை" சேர்த்தது. தூக்கிலிடப்படுகிறவனை அல்லது சுடப்படப்படும்படிக்கு தீர்க்கப்பட்டவனுடைய தலையை மூடுவது என்பது மிக நீண்ட கால வழக்கமாக இருந்து வந்தது, ஆனால் இயேசுவின் முகமோ முழு உலகமும் பார்க்கும்படி வெளிப்படையாக இருந்தது. அந்த நாளின் தீவிரவாதிகள் என்னும் இரண்டு கள்ளர்கள் (மத். 27:38), அல்லது "குற்றவாளிகள்" (லூக். 23:32, [KJV, ASV]) அதன் பொருள் "தீங்கிழைப்பவர்" அல்லது "துன்மார்க்கன்"), அவருக்கு விரோதமாகப் பேசினர். "தமக்கு எதிரான பகைமை" (RSV) இயேசுவை "அவமானப்படுத்தும் இழிவான" வார்த்தைகள் கொண்டு வழிப்போக்கர்கள் அவரைப்பார்த்து பேசினர் என்பனவற்றையே அவர் நிஜத்தில் சகித்தார். தாம் பிதாவை பிரியப்படுத்துவதை அவர் அறிந்திருந்தார். **தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்** என்ற மிகவும் கனம் நிறைந்த ஒன்றை இப்போது அவர் பெற்றுள்ளார்.

எபிரெயரின் உண்மையான வாசகர்கள்கூட, இழிவுப்படுத்தப்படுவதை அனுபவித்தனர், சகிப்புத் தன்மையைக் கொண்டிருக்க அவர்களுக்கு அவசியமாயிருந்தது. அவர்களுடைய ஆத்துமாக்களையும், மற்றும் நம்முடையவைகளையும், உண்மையில் மனுக்குலம் அனைவரையும் இரட்சிக்கும் விதமாக அவர் பாடுகளை அற்புதவிதமாகச் சகித்தார். இந்தக் கிரியை அவருக்கு மிகுந்த **சந்தோஷத்தைக்** கொண்டுவந்தது.

**வசனம் 3.** நீங்கள் **இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு**, ... இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரைப் போலவே ஆகும்படிக்கு கிறிஸ்தவர்கள் **அவரைக் கருத வேண்டும்**. கருதுதல் என்ற வார்த்தை (ἀναλογίζομαι, *அனாலஜிசோமை*)[17] என்பதில் இருந்து வந்தது, அதன் அடிப்படைப் பொருள் அனாலஜி என உருவானது. கேலிபண்ணப்படுவதையும் மற்றும் அவமானப்படுவதையும் சந்திப்பதில் உறுதியாய் நிலைத்திருக்கக் கற்றுக்கொள்ளும்படிக்கு, நம்முடைய பாடுகளுடன் இயேசுவோடு நாம் ஒப்பிட வேண்டும். அவமானப்படுத்தும் இழிவான வார்த்தைகள் மற்றும் பாடுகள்

இருந்தாலும்கூட, கிறிஸ்து தாம் சிலுவையில் நிறைவேற்றியதன் மகிழ்ச்சியில் அவர் கூர்நோக்குடன் இருந்தார். சக மனுக்குலத்தினரிடமிருந்து தற்காலிகமாக வரும் அவமானத்தைக் குறித்து நாம் சிந்திக்காமல், சிலுவையிலிருந்து நமக்குக் கிடைக்கும் பலனைக் குறித்து நாம் அதிகம் சிந்திக்க வேண்டும்.

விசுவாசத்தை விட்டு விடுதல் என்பதின் முதல் படி என்பது நம்பிக்கை இழத்தல், மற்றும் மிகவும் சோர்வடைவதை தொடர்ந்து; முயற்சிப்பதாகும்.[18] ஒரு தூக்கமற்ற இரவிற்குப் பின்பு இயேசு எவ்வளவு சோர்வடைந்திருந்தார்! அவருடைய முதுகில் கிழிக்கப்பட்ட காயங்கள், முள்முடியின் தொடர்ச்சியான வலிவேதனை, மற்றும் தாங்கள் செய்வது என்னவென்று அறியாமல் செய்பவர்கள் மேல் அவர் கொண்டிருந்த அவருடைய பரிதவிப்பும், இரக்கமும் கலந்தவைகளால் அவர் சந்தித்த சோதனையின் அழுத்தத்தைக் கற்பனை செய்து பாருங்கள். அவைகள் அனைத்தும் மூழ்கடித்துவிடும். நம்மைப் போன்று, அவருக்கு முன்னிருந்த நம்பிக்கையின் மகிழ்ச்சியை அவர் கொண்டிருந்தார். இறுதி பலனின் நம்பிக்கையை நாம் இழந்தால், நாம் தொடர்ந்து எடுத்துவரும் முயற்சியை விட்டுவிடுவோம். “பரிசைப் பெறும்படிக்கு இலக்கை நோக்கி நாம் முன்னேற வேண்டும்” (பிலி. 3:14).

கிறிஸ்துவின் பரிசு என்பது தம்முடைய பிதாவிடம் நெருங்குதல், அவருடைய வலதுபாரிசத்தில் அமருதல் ஆகும், அது மகா கனம்பண்ணப்பட இருக்கிற இடம். கடந்த காலத்தில் அவர் தமது இருக்கையை விட்டு எழுந்தார், மற்றும் தெய்வீக சிங்காசனத்தின் மீது இராஜரீகமாகத் தொடர்ந்து அமருவார் என்பதைக் கிரேக்க செயல்வினை குறிப்பிடுகிறது.[19] தமது மேசியாத்துவத்தை மறுதலித்த **பாவிகளிடமிருந்து** கொடுங்கோன்மை மற்றும் வலியையும் சகித்தவர் கிறிஸ்து. தமக்குக் காத்திருப்பது என்னவென்று அவர் அறிந்திருந்தபடியால், தாம் செய்யவேண்டியதை அவர் விரும்பியே ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆகையால் பந்தயமானது நமக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. அது வலிமை வாய்ந்ததும் மற்றும் சோதனைகள் நிறைந்ததுமாயிருக்கிறது. நம்மைத் தடுக்கிற எல்லாவித பாரமானவைகளையும் நீக்கும்படிக்கு நாம் எல்லாவற்றிலும் ஆயத்தமாயிருக்க வேண்டும், ஓடுவதில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இயேசுவில் கூர்நோக்குள்ளவர்களாகவும், முடிவு வரை விடாமுயற்சி எடுப்பவர்களாகவும் இருந்து அதில் நிலைத்திருக்க வேண்டும். நமக்கு முன் சென்ற உண்மையுள்ளவர்களைத் தேவன் அங்கிகரித்தார், கொடுமுடியில் வெற்றியின் கிரீடத்துடன் காத்திருப்பதை நம்மால் காண முடியும்.

## தேவனுடைய பிள்ளைகளாக ஒழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும் (12:4-11)

**4பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில்
இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும்
எதிர்த்துநிற்கவில்லையே. 5அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய
சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால்
கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. 6கர்த்தர்
எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம்
சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று
பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற
புத்திமதியை மறந்தீர்கள். 7நீங்கள் சிட்சையைச்
சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி
நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? 8எல்லாருக்கும்
கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள்
புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. 9அன்றியும்,
நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது,
அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக
ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி
நடக்கவேண்டுமல்லவா? 10அவர்கள் தங்களுக்கு நலமென்று
தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய
பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய
பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். 11எந்தச் சிட்சையும்
தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்;
ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய
சமாதான பலனைத் தரும்.**

கண்டித்தல் என்பது தேவனுடைய அன்பைச் சுட்டிகாட்டுகிறது என்று ஆசிரியர் ஆதாரத்துடன் எபிரெயர்களுக்குக் காண்பிக்கிறார். முதலாவது, வசனங்கள் இந்தச் சத்தியத்தைச் சோதித்தறிகிறது என்று அறிவித்தார். அடுத்ததாகத் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து கொள்கைகளைக் கற்றுக்கொள்வதில் அவர் உறுதியாயிருந்தார், ஒரு அன்பான தகப்பன் தன் குழந்தைக்கு நேரடியான செயலில் நாம் இதைக் காண முடியும். கடைசியாக, ஒழுக்கத்தின் ஆசீர்வாதமான விளைவுகளை அவர் விவரிக்கிறார்.

**வசனம் 4.** முதலாவது, **பாவத்திற்கு எதிரான** பாடுகளில் வாசகர்கள் ஈடுபட்டுள்ளனர், இயேசுவின் **இரத்தம் சிந்துதல்** போன்று, அவர்கள் **இன்னமும்** அவ்வாறு இரத்தம் சிந்துவதற்கு வழிநடத்தப்படவில்லை. அவர்களுடைய பாடுகள், தேவனுடைய உச்சகட்ட ஆசீர்வாதமாக ஒழுக்கத்தை ஏற்றுக்கொள்வதைக் கற்கும்படி செய்கிறது. கடந்த காலத்தில் ஒருவரும் இரத்த சாட்சியாக மரிக்கவில்லை என்று இந்த

வசனம் பொருள் கொள்ளவில்லை. (அப்போஸ்தலர் யாக்கோபு பட்டயத்தால் கொல்லப்பட்டான், அப்போஸ்தலர் 12:2.) எதிர்காத்தில் விசுவாசத்திற்காக ஒருவரும் மரிக்கப்போவதில்லை என்பது அதன் பொருள் அல்ல. இந்தக் கிறிஸ்தவக் குழுக்கள் (பவுல் பெற்றது போல்) முதுகில் கொடூரமாகத் தாக்கப்படவில்லை அல்லது (நீதிமானாகிய யாக்கோபு, இயேசுவின மாம்ச சகோதரன், பெற்றது போல்) கல்லெறியப்படவில்லை.[20] கோழைத்தனமான செயல்பாடுகள் அல்லது யூதத்துவத்துடன் ஒத்துப்போதல் என்பதிலிருந்து அவர்களுடைய துன்பப்படுதலை தவிர்த்தலானது வந்திருக்க வேண்டும். ஒத்துப்போதல் என்பது இன்றைய காலத்தின் பிரச்சனையாகும்: கடந்த காலத்தில் பாடுபட்டவர்களில் சிலரிடம் இருந்த தைரியத்தை இவர்கள் இழந்துவிட்டார்கள். கிறிஸ்தவ அமைப்பினர் மேம்போக்காகச் செயல்படுவது அதிக இரக்கமுள்ளவர்களாக இருப்பது மற்றும் மறுபக்கத்தில் பாடுகளைச் சகித்துக்கொள்ளுதல் மூலம் துன்பப்படுவதைத் தவிர்க்க முயற்சிக்கின்றனர்.

**வசனங்கள் 5, 6. சிட்சை** வரும் என்று வசனங்கள் போதிக்கின்றன (வசனம் 5). வசனங்கள் என்ன சொல்கின்றன என்பதை இந்த வாசகர்கள் **மறந்துவிட்டனரா?** இதனிமித்தம் ஆசிரியர் அவர்கள் மேல் குற்றம்சாட்டுகிறார், அவர்கள் செய்திருப்பார்கள் என்று நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த வசனங்களிலுள்ள கூற்று நீதிமொழிகள் 3:11, 12 லிருந்து எடுக்கப்பட்டது, மற்றும் அது அவர்களுக்கு நேரடியாகச் சொல்லப்பட்டிருக்குமேயானால், முதலாம் நூற்றாண்டு எபிரெயர்களுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. “நீதிமொழிகளில் ‘மகன்’ என்று எச்சரிக்கப்பட்டுள்ளவன் நம்மில் ஒருவனாக இருக்க முடியாது!” என்று நாம் நினைக்கக்கூடும். வேதாகமம் எப்போதும் நடப்பில் இருக்கும், ஆகவே அது எப்போதும் நடைமுறைப்படுத்தக் கூடியது. பழைய ஏற்பாட்டு சத்தியங்களின் கோட்பாடுகள் எப்போதெல்லாம் நமக்குக் கூடுமானதாக இருக்கிறதோ அந்த அளவிற்குச் செயல்படுத்தப்பட வேண்டியதாகவுமிருக்கிறது. கண்டிப்பது மூலம் **நேசிக்கிறவர்**, நம்மைப் “படிப்பிக்கிற” தேவனாக இருக்கிறார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

3:7-11-ல் இம்மாதிரியான விண்ணப்பம் முன்னமே உருவாக்கப்பட்டுவிட்டது, நூற்றாண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்ட கண்டிப்பானது எபிரெயரின் முதல் வாசகர்களுக்கும் பொருந்தக் கூடியதாக இருந்தது (காண்க சங். 95:7-11). இந்தப் பகுதியானது ஒழுக்கத்தைச் (παιδεία, *பைடியா*) சுட்டிக்காட்டுகிறது, ஒரு குழந்தைக்கு அறிவுரை கூறுவதும் மற்றும் பயிற்சிப்பதிலுமே இது ஈடுபாடாக உள்ளது.[21] கிரேக்க செம்மொழியில் இந்த வார்த்தை “கல்வியைக்” குறிப்பிடுகிறது.[22] வார்த்தையின் பொருளுக்கு “தண்டனை” என்பது

தேவையில்லை, ஆனால் மையப்பொருளில் "பாடு" என்னும் விதம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பாடு என்பது ஒழுக்கமாயிருக்கும்படிக்கு என்பதும் அல்லது தேவனிடமிருந்து கற்றுக்கொள்ளும் முறை என்பதும் யூதர்களின் பொதுப் பார்வையாக இருந்தது.[23]

**வசனங்கள் 7, 8.** பிள்ளைகளாக நாம் பாடுபடும்போது (வசனம் 7), நாம் **குமாரனை** பின்பற்றுகிறோம் (5:8). மகிமையே அதன் பலனாக இருக்கிறது. எபிரெயர் 2:10-ல் தமது பாடுகளுடன் இயேசு "அநேக பிள்ளைகளை மகிமைக்குக் கொண்டுவருவதோடு" இணைக்கப்படுகிறது. அப்போஸ்தலர் 14:21, 22ல் பவுலும் பர்னபாவும் சொன்னதுபோல், முதலில் சில உபத்திரவ அனுபவங்கள் இல்லாமல், இறுதி மகிமைக்குப் போக ஒருவரும் எதிர்பார்க்கக் கூடாது. இந்தப் பகுதி "உபத்திரவக் காலத்தை" ஆணித்தரமாகக் குறிப்பிடாமல், இந்த வாழ்க்கையின் தொடர் சோதனையையே அது குறிப்பிடுகிறது.

***சிட்சை*** என்பது தமது **பிள்ளைகளுக்கான** தேவனுடைய அன்பின் அடையாளமாக இருக்கிறது. நாம் சாத்தானின் பிள்ளைகள் என்று பாடுகளின் குறைபாடு சுட்டிக்காட்டுகிறது! சிட்சை நமக்கு அவசியமானதாக இருக்கிறது என்பதே நம்முடைய இயல்பு (வசனம் 10-ல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல்). "எல்லா ஒப்பீடுகளுக்கும் அப்பாற்பட்ட மகிமையின் நித்திய நிறைவை" அது நமக்கு வழங்குகிறதாக இருக்கிறது (2 கொரி. 4:17). விசுவாசத்தினிமித்தம் சில கஷ்டங்களை நாம் சகிக்கும் போது நாம் விட்டுவிடக் கூடாது என்பது தான் இதன் முக்கிய யோசனையாக இருக்கிறது.

நாம் ஏன் தேவனுடைய சிட்சையை விரும்ப வேண்டும் அல்லது அது நமக்கு நன்மையாயிருப்பதாகக் காண வேண்டும்? ஆசிரியர் மூன்று காரணங்களைக் கொடுக்கிறார்: (1) இது நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்குக் குறிப்பிட்ட அடையாளமாக இருக்கிறது (வசனம் 8). சிட்சிக்கப்படாத பிள்ளைகள் நேசிக்கப்படாதவர்கள். டோனால்டு குத்ரெ சொன்னார், "தன் *மகனை* ஒழுங்குபடுத்தாத ஒருவர் *தகப்பனாயிருப்பதற்குத்* தகுதியற்றவர், மகனானவன் சிட்சை முறைமைகள் அனைத்திற்கும் விலகி செல்வானேயானால் அவன் குமாரத்துவத்தை இழக்கிறவனாக இருக்கிறான்."[24] (2) சிட்சையானது நமக்கு நன்மையாகவும், மற்றும் நாம் தேறினவர்களாவதற்கு உதவிகரமாகவும் இருந்தது என்பதை நாம் திரும்பிப் பார்த்து அறிந்துகொள்ள முடியும் (வசனங்கள் 9, 10). (3) இதன் மூலம் "தேவனுடைய பரிசுத்தத்தை" மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் அளவிற்கு வளர முடியும் (வசனம் 10). தேவன் நம்முடைய "பிதாவாக" இருக்கிறார் என்பதை இந்த இடத்தில் மட்டுமே நிருபமானது மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது (வசனம் 9).

**சட்ட விரோதமான** பிள்ளைகளுக்கு எந்தவித சுதந்திரமும் கொடுக்கப்படாததை நிருபத்தின் ஆசிரியர் தனக்கு சாதகமாக

எடுத்துக்கொள்கிறார். ரோமானிய சட்டத்தின்படி அம்மாதிரியான பிள்ளைகள் **தகப்பனின்** கீழ் வரமாட்டார்கள், அவரும் அப்படிப்பட்டவர்களுக்கு எந்த அறிவுரையும் கொடுக்கமாட்டார்.[25] நாம் சிட்சிக்கப்படும் தேவன் நம்மை அனுமதிக்கிறார் என்றால், நாம் உலகத்தினரால் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்தாலும்கூட, அவர் நம்முடைய தகப்பனாக இருக்கிறார் என்றும் மற்றும் நாம் சட்டப்பூர்வமான பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதையும் அவர் விளக்குகிறார்.

**வசனங்கள் 9, 10. சிட்சை என்பது** பாடுகளின் ஒரு பகுதியில் உள்ளடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. தன் பிள்ளைகளை ஒழுங்குப்படுத்துதலில், ஒரு **தகப்பன்** தன் பிள்ளை மீது ஒரு குறிப்பிட்ட அளவில் தனது அன்பை பயன்படுத்துகிறார். அவர்களால் அதைப் புரிந்துகொள்ள இயலாது அல்லது அந்தக் காலகட்டத்தில் சிட்சையின் அர்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நாம் விரும்பவில்லையென்றாலும், நல்ல பலன்களைக் கொடுக்கும்விதமாக, நம்முடைய தேவன் **நம்முடைய நன்மைக்காக நம்மை சிட்சிக்கிறார்**. எபிரெயர்கள் அனுபவித்த சிட்சையானது அவர்களுக்கு உற்சாகப்படுத்துகிறதாகவும் மற்றும் ஆறுதலாகவும் இருந்தது, மேலும் அவர்கள் மெய்யாகவே தேவனுடைய பிள்ளைகள் என்பதை உறுதிப்படுத்தியை அளிக்கிறது.

அப்போஸ்தலர் பவுலின் பாடுகள் மூலமான சிட்சை ஒரு நல்ல உதாரணமாக உள்ளது. அவருடைய பாடுகள் - "என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது" (2 கொரி. 12:7-10) - அது வலிக்கு ஆதாரப்பூர்வமான காரணமாக இருந்தது. அது தர்மசங்கடமாகவும் இருந்தது; ஆனாலும் அவருக்கு அதிலிருந்து பயனுள்ளதாக இருந்தது. அந்தப் பாடுகளானது சுவிசேஷம் மேலும் பிரகாசமாக ஒளிரச்செய்தது, மற்றும் அவரைச் சற்று குறைவாகவும் காண்பித்தது. இப்படிப்பட்ட பாடுகள் சிறுமையான மனிதர்களைத் தாழ்வுப்படுத்தும், ஆனால் பவுலுக்கு அவ்வாறு அல்ல. பவுலின் சரீரத்திலே கிறிஸ்து உயர்த்தப்பட்டார் (பிலி. 1:20), காரணம் "பொக்கிஷமானது" "பூலோக பாத்திரத்தில்" இருந்தது (காண்க 2 கொரி. 4:7). நிற்கும்படிக்குத் தன்னையல்லாமல், கர்த்தருடைய செய்தியை அனுமதித்தது மூலம் தான் ஒரு சிறந்த தேவனுடைய ஊழியக்காரன் என்பதைப் புரிந்துகொண்டார். அவர் தனது பலவீனத்தை பெருமைப்படுத்தக் கற்றுக் கொண்டார் (2 கொரி. 12:9)! "நம்முடைய வலிகள் மூலம் தேவன் சத்தமிடுகிறார் ... செவிட்டு உலகத்தை எழுப்புவதற்கான அவருடைய மகா ஒலிபெருக்கி ஆகும்"[26] என்று சொன்ன சி எஸ் லெவிஸை பவுல் ஏற்றுக்கொள்வார். ஆல்பர்ட் பர்ண்ஸ் சொன்னார், "பாடுகளினால் பயனடையாத எந்த ஒரு கிறிஸ்தவனையும் நான் ஒருபோதும் அறியவில்லை."[27]

தேவனானவர் **ஆவிகளின் பிதா** (வசனம் 9) என்று விசுவாசிக்கிறோம், அதன் பொருள் அவரை எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பிதா என்று அங்கிகரித்தல். அவர் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி இவ்வாறாக அழைக்கப்பட்டுள்ளார் (மத். 6:9; லூக். 11:2; யோவான் 20:17; ரோமர் 8:15, 16; கலா. 4:6). "ஆவிகள்" தூதர்களாகக் கருதப்பட முடியாது, காரணம் எபிரெயரில் அவைகள் தேவனுடைய பிள்ளைகளாக எண்ணப்படவில்லை (1:5; 2:5, 16).

தேவன் நம்முடைய ஆவிகளின் சிருஷ்டிகராக இருக்கிறார், அவர் அதை நாம் இந்த உலகத்தில் பிறக்கும் போது கொடுத்தார். மரணத்தின்போது "ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது" (பிர. 12:7). "ஆவிகளின் பிதாவை" நாம் கொண்டிருக்கிறோம் என்பதைப் பிரசங்கியின் ஞான ஆசிரியர் அறிவார் (வசனம் 9), அது உணர்வு வெளிப்பாடாகப் புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஆவிகளின் பிதாவில்" ஒருவருடைய விசுவாசம் என்பது **உயிருடன்** இருப்பது ஆகும். இது நித்திய வாழ்வையும் மற்றும் இப்போதைய இருப்பையும் குறிக்கிறதாயிருக்கிறது (ஆபகூக் 2:4; எபி. 10:38).

ஒரு கிரேக்க இளைஞருக்கு, அவன் வாலிப பருவம் அடைந்து மூன்று வருடங்கள் வரையோ, திருமணம் வரையோ அல்லது பொதுப் பதிவேட்டில் பதியப்படும் வரையோ தகப்பனுடைய சிட்சைக் கட்டுப்பாடு கொஞ்சக்காலம் (வசனம் 10) வரை நீடித்திருக்கும்.[28] "கொஞ்சக்காலம்" சிட்சை நடவடிக்கை என்பது கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் சில வருடங்கள் வரை நீடிக்கும், ஆனால் நித்தியத்தின் பார்வையில் "கொஞ்சக்காலம்" என்றே எண்ணப்படும் (2 கொரி. 4:16, 17).

**வசனம் 11. *சிட்சை*** என்பது ரோமர் 2:20ல் போதகனாகவும் (παιδευτής, *பெய்டுயுட்ஸ்*) என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அம்மாதிரியான நபர் என்பவர் "ஒரு பயிற்சியாளர்" அல்லது "ஒரு ஆசிரியர்" ஆவார், அவர் விசேஷமாகப் பிள்ளைகளுக்கு சிட்சைகளையும் மற்றும் அறிவுரைகளையும் வழங்குகிறவர். இந்த வார்த்தை *பெய்டியோன்* ("இளம் சிறுவர்கள்") என்பதுடன் தொடர்புடையது மற்றும் "பிள்ளைகளைத் திருத்துபவர்," "ஒழுங்குப்படுத்துபவர்" அல்லது "ஒரு குமாரனைப் பயிற்சிப்பவர்."[29] ஒரு பயிற்சிப் பெற்ற பிள்ளை தன்னை ஒழுங்குப்படுத்தியதற்காகப் பெற்றோரை மதிக்கிறவர்களாக இருக்கிறான் (வசனம் 9).

அன்பின் கண்டிப்பு என்பது "பழிவாங்குதலாக இருக்க முடியாது, ஆனால் அது எப்போதும் பயனுள்ளதாக இருக்கும்."[30] வாலிபப் பிராயத்தில் கேட்கக் கூடாததாகக் காணப்படுவது, வயதானவர்களின் பார்வையில் அது மிகச் சிறப்பானதாக அடிக்கடி காணப்படும். பூலோக தகப்பன் நம்மிடம் கடினமாகவும் மற்றும் ஆதரவற்றவராகவும்

இருந்ததை நாம் நம்புகிறோம், ஆனால் தேறினவர்களான பின்பு அவர்களை நேசிக்க முடியும் என்பது மாறுபாடாக இருக்கவில்லையா? என்னை சிட்சிப்பதில் என் தகப்பன் தவறு செய்திருக்கலாம், ஆனால் அவர் என்னை என்று நான் அறிவேன். நான் குழந்தையாக இருந்தபோது அவர் கொடுத்த தண்டனைகள் கடுமையாக இருந்தது என்றாலும்கூட, நான் இப்போது அவரை மதிக்கிறேன்.

உண்மையான அன்பு கடினமானதை எதிர்பார்க்கிறது மற்றும் சில சமயங்களில் பயங்கரமான சிட்சித்துதலையும் பெற்றோரின் தண்டனையானது சிலவேளைகளில் திடீர் கோபத்தினால் அல்லது அன்பின் வல்லமையால் வரக்கூடியதாக இருக்கிறது. இருப்பினும், வழக்கமாக, பிள்ளைகள் வழிமாறிச் சென்றுவிடுவார்கள் என்ற பயத்தின் நிலையிலும் பெற்றோரின் அன்பின் இருக்கும். நம்மைத் தண்டிக்கிறவராகிய நம்முடைய பூலோகத் தகப்பனை நம்மால் நேசிக்க முடியுமென்றால், நமக்கு ஆவியைக் கொடுத்த பரலோகத் தகப்பனை நம்மால் நேசிக்க முடியாதா? தங்களுக்கு நலமென்று தோன்றின (வசனம் 10), “அவர்களுக்குச் சரியானதாகக் காணப்பட்டதைச்” செய்தார்கள் என்ற உண்மையானது, பெற்றோர்கள் தங்கள் தீர்ப்பில் தவறு செய்யக் கூடியவர்கள் என்பதிலும் முக்கியத்துவப்படுத்தலாம்.

சிறுவனின் விசுவாசத்தைக் கட்டியெழுப்புதலானது அவனை வளர்க்கும் முறையையும் சேர்த்தது ஆகும். நல்ல பெற்றோர் கொடூரமாகவோ அல்லது பிடிவாதமாகவோ செயல்படமாட்டார்கள், தங்களுக்குச் சரியானதும் மற்றும் அவசியமானதுமாக நம்புகிற நீதியின் கொள்கையைச் செயல்படுத்துவார்கள். தேவன் “நம்முடைய நன்மைக்காக நம்மை சிட்சிக்கிறார்,” அதன் பொருள் மனம்போன போக்கின் அடிப்படையில் அல்லாமல் மற்றும் *முற்றிலும் நன்மைக்காகவே*. அவர் இதைச் செய்ததினிமித்தம், நாம் அவருடைய சித்தத்திற்குத் தன்னைத் தகவலமைத்துக்கொள்ளுதல் மற்றும் கீழாக்குதலுக்கு நம்மைத் தயார்படுத்திக்கொள்ள முடியும், இறுதியாக இப்போதும் மற்றும் நித்தியத்திலும் - அவருடைய பரிசுத்தத்தில் பகிர்ந்துகொள்ள முடியும். பூலோக பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தங்களைப்போன்று நல்லவர்களாக வளர விரும்புவதுபோல், நாமும் தேவனைப்போல் நல்லவர்களாக வளர அவர் விரும்புகிறார். தேவன் விரும்புவதை நாம் விரும்புவதையும் மற்றும் அவருடைய சாயலில் வளர்வதையும் சேர்ந்ததே ஆகும்.

**பயிற்சித்தல்** என்பது (γυμνάζω, *ஜும்னாஸோ*) என்னும் வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, “ஜிம்னாஸியம்” என்ற மூல வார்த்தையிலிருந்து வந்தது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இந்தப் பதம் கிரேக்க ஜிம்னாஸியம் என்பதைக் கொணர்கிறது, அங்கே வாலிபர்கள் உடற்பயிற்சி போட்டிக்குப் பயிற்சி எடுத்துக்கொள்வார்கள். பரிசுகள் ஈர்க்கிறதாய் இருக்கின்றன,

வலிமையான பாடுகள், இதைத் தொடர்ந்து பயிற்சிகள் தீவிரமாகக் காணப்படுகின்றன."[31] உடல்பயிற்சி சரீர தசைகளை வலுவாக்குவதுபோன்று, வாழ்க்கையின் பாடுகள் ஆவியைப் பலப்படுத்துகின்றன. கிறிஸ்தவர்கள், ஆற்றல் வாய்ந்த சிட்சையை நேசித்தல் மற்றும் அவைகளைப் பிரயோஜனமான பாடுகளாக அங்கிகரிக்க வைக்கின்றன.

நேர்த்தியான பயிற்சி மற்றும் ஒழுக்க முறைமையின் பலன்கள் என்பது அது **நீதியாகிய சமாதான பலனைத் தரும்** மற்றும் அவருடைய பரிசுத்தத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் (வசனம் 10). நோக்கமுடைய, நேர்மையான மற்றும் சிறந்த பண்பு மிக்க வாழ்க்கை வாழ்தல் என்பதே கனிகொடுத்தல் ஆகும். கிறிஸ்தவனின் நோக்கம் என்பது தேவனுடைய மகிமையைச் சேவித்தல் ஆகும். சுத்திகரிப்பின் மூலமாக நாம் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளோம் (காண்க 10:22). தேவனுடனான நம்முடைய பரிசுத்தம் பரிபூரணப்படுதல் என்பது பரலோகத்தில் மட்டுமே நிறைவேறுகையில், அவருடைய இரட்சிப்பின் கிருபையினிமித்தம் மற்றும் பலிதான மரணத்தின் மூலமே இப்போது நாம் பகிர்ந்துகொள்கிறோம் (10:19).

ரோமர் 5:1-ல் பவுலின் மூலமாகச் "சமாதானமும்," "நீதியும்" இணைக்கப்பட்டுள்ளன, இங்கே சமாதானம் சொல்வது என்னவென்றால் விசுவாசத்தின் மூலம் நீதிமானான, பின்பு சமாதானம் வருகிறது. பயிற்சி வழியாகவும் மற்றும் பாடுகள் மூலமாகவும் நாம் அடையும் "சமாதானத்தினாலான நீதியின் கனி" என்பது எவ்வளவு அருமையாயிருக்கிறது! துக்கங்களை மேற்கொள்ளும்படிக்கு ஜெபித்தல் மூலமும் மற்றும் கர்த்தர் அருகில் இருக்கிறார் என்பதை நினைவுகூருவது மூலமும் நேர்மையான ஆவியைப் பண்படுத்துவது மூலமும் கனியை நிலைநிறுத்துகிறோம் (பிலி. 4:4-7).

## தேவனுடைய கிருபையைத் தேடும்படிக்கும் மற்றும் விசுவாசத்தின் வாழ்க்கை வாழும்படிக்கும் உற்சாகப்படுத்துதல் (12:12-17)

**12 ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த**
**முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, 13 முடமாயிருக்கிறது**
**பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு**
**வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். 14 யாவரோடும்**
**சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்;**
**பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.**
**15 ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும்**
**யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக்**
**கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்,**

**[16]ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். [17]ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்.**

விடாமுயற்சியில் நிலைத்திருக்கும்படிக்கு தனது விசுவாச வாசகர்களுக்குப் பலவித புத்திமதிகளைச் சொல்லி ஆசிரியர் அழைக்கிறார். விசுவாசத்தில் வளர்வதையும் மற்றும் நிலைத்திருப்பதையும் உறுதிப்படுத்தும்படிக்கும், எவராவது விசுவாசத்திலிருந்து விழுவதைத் தடுக்கும்படிக்கும், வாழ்க்கையின் குறிப்பிட்ட மனோபாவங்களும் மற்றும் பண்புகளும் கொண்டவர்களாகத் தங்களைத் தகவலமைத்துக்கொள்ள வேண்டும்.

**வசனங்கள் 12, 13.** ஒருவரும் தனது பிரயாணத்தில் பின்தங்கிப்போவதினிமித்தம் விசுவாசத்தை விட்டுவிட்டு, சபை கூடிவருவதிலிருந்து விலகிப்போகக் கூடாது என்பது தான் நம்முடைய கடப்பாடு ஆகும். **பலவீனமுள்ளவர்கள்** கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் (வசனம் 12).

முதல் புத்திமதியானது ஏசாயா 35:3-க்கு ஒத்ததாக இருக்கிறது. இரண்டாவது நீதிமொழிகள் 4:26, 27 இருந்து கொடுக்கப்பட்டுள்ளது.[32] செப்துவஜிந்த் சொல்கிறது, "உங்கள் பாதங்களுக்கான வழியை நேராக்குங்கள், உங்கள் பாதைகளைச் சீராக்குங்கள். வலது புறமோ அல்லது இடது புறமோ திரும்பாமலும், மேலும் தீங்கான வழியிலிருந்து உங்கள் பாதங்களை விலக்குங்கள் …" மேசியாவைக் குறித்த ஒரு பகுதி ஏசாயா 35 வசனங்கள் 5 மற்றும் 6-ல் தெளிவாகக் காணப்படுகிறது, மேசியா சில அற்புதங்களை நிகழ்த்துவார் என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. (மத். 11:5, ஏசாயாவின் இந்தப் பகுதியை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது.)

சரீரத்தையோ அல்லது ஆவியையோ குறிப்பிடுகையில், "நெகிழ்ந்த கைகள் மற்றும் முடமான முழங்கால்கள்" என்பவை "மனக்கசப்பினாலும் மற்றும் சோர்வை உண்டுபண்ணுகிறதாகவும் இருப்பதை உருவகமாக வர்ணிக்கப்பட்டுள்ளது."[33] பாபிலோனினால் சிறைபிடிக்கப்பட்டவர்கள் திரும்பி வரும்போது உதவி தேவைப்படுகிறவர்களாக இருந்தனர் என்பதாகப் பழைய ஏற்பாட்டு பகுதி சித்தரிக்கிறது. முடமாயிருக்கிறது **பிசகிப்போகாமல்** (வசனம் 13) என்பதன் பொருள் **முடமானவர்கள் நொண்டி** நடக்கும்போது சில உதவி தேவைப்படுகிறவர்களாக இருக்கிறார்கள் என்பதாகும். எபிரெயரில் கிறிஸ்தவர்கள் தங்கள் பரலோக எருசலேமிற்குச் செல்லும் வழியைக் குறிப்பிடுகிறதாக இருக்கிறது. தங்கள் மோட்ச பயணத்தில்

பலவீனமானவர்களுக்கு உதவும்படிக்குப் பலவான்கள் இருக்க வேண்டும். ஆவிக்குரிய ரீதியாக முடமானவர்கள் சுகமளிக்கப்படுவது விரும்பத்தக்கதாகக் காணப்படுகிறது. இது முழுச் சபைக்கும் உற்சாகப்படுத்துவதை அவசியப்படுத்துகிறதாக இருக்கிறது.

இதே யோசனை ரோமர் 15:1-ல் காணப்படுகிறது, அங்கு பவுல் சொல்கிறார், “அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்.” பலமுள்ளவர்கள் என்னும் வார்த்தை பன்மையைக் குறிப்பிடுகிறது, அதாவது “அநேகரால் ஒன்றுபட்டு எடுக்கப்படும் முயற்சியைக்” குறிப்பிடுகிறது.[34] பலவான்கள் இதைத் தொடர்ந்து படிக்க வேண்டும், சோர்வாகவும் மற்றும் துக்கமாகவும் இருக்கிறவர்கள் மற்றவர்களிடமிருந்து எவ்வாறு உதவி பெறுவது என்பதைக் குறித்துக் கற்றுக்கொள்ளும்படிக்கு படிக்க வேண்டும். தங்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கான பயணத்தில் மற்றவர்களை உற்சாகப்படுத்துகிறவர்களாக ஒவ்வொரு கிறிஸ்தவரும் இருக்க வேண்டும். பலவீனரை நமக்குப் பின்தள்ள காரணமானவைகளான வழியை விட்டு விலகி செல்லுகிறதும் அல்லது தடைகள் மற்றும் மீறுதலை உண்டுபண்ணுகிறவைகளையும் நாம் அனுமதிக்க முடியாது.

பாதைகள் கரடுமுரடாக மற்றும் கோணலானவைகளாக இருக்கையில், **நேரான பாதைகள்** என்பது விடாமுயற்சியைக் குறிப்பிடுகிறதாக இருக்கிறது. நேரான சாலையில் ஒரு மாற்றுத்திறனாளி பிரயாணி நடந்து செல்வது என்பது ஆசீர்வாதமான ஒன்று ஆகும்! விசுவாசத்திலிருந்து வழுவிச் செல்வது என்பது சுலபமானதாகத் தோன்றுகிறது, ஆனால் இது எப்போதுமே மாற்றாக இருந்ததாக ஆதாரமில்லை. தேவனுடைய வழி மட்டுமே காலம் மற்றும் முயற்சியுடன் எளிதாகிறது (மத். 11:28-30). மத்தேயு 7:13, 14-ல் உள்ளதுபோல், வாசல் இடுக்கமும், வழி “நெருக்கமுமாயிருக்கிறது தான்” “நேராகவும்” இருக்கிறது.

**சொஸ்தமாகும்படிக்கு**, என்பது ஆவிக்குரிய சுகமளித்தல் அல்லது விசுவாசத்திற்கு மீட்டெடுக்கப்படுவதாக இருக்கிறது. ஏசாயா 6:10 மற்றும் மத்தேயு 13:15-ல் அது சுகமளித்தல் என்பதைக் குறிப்பிடுகின்றது, அது இயேசுவின் செய்தியைக் கேட்பதிலிருந்து வருகிறது (மேலும் காண்க யோவான் 12:40; அப். 28:28).

**வசனம் 14.** தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் அவருடைய இரக்கத்தின் கீழ் வைத்திருப்பதும், மற்றும் **ஒவ்வொரு மனிதருடனும் சமாதானத்தைக் கடைபிடித்தல்**, மற்றும் **சுத்திகரிப்பைக்** கொண்டிருப்பதும், நம்முடைய ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்கும் மகா நேர்மறையாகும். இவைகள் அனைத்தும் நம்முடைய பயணத்தின் குறிக்கோளும் மற்றும் ஆர்வமான நம்முடைய சம்பாத்தியமும் ஆகும்.

**தொடருதல்** (διώκω, *டியாகோ*) என்ற வார்த்தையானது ஒரு

வலிமையான வார்த்தையாகவும், மற்றும் இலட்சியத்தை அடையும் நோக்கோடு செயல்படும் ஆர்வத்தைச் சுட்டிக்காட்டுகிறதாக இருக்கிறது.[35] சமீபத்தில் சபையில் ஏற்பட்ட உபத்திரவம் மற்றும் அதற்கு எதிர்வினையாற்றுதலைக் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு இதுவே பதிலாக இருக்கக் கூடும்.

கிறிஸ்தவர்கள் சமாதானம், கிருபை, மற்றும் பரிசுத்தம் ஆகிய இந்த மூன்று காரியங்களுக்காகப் போராட வேண்டியவர்களாக இருக்கின்றனர். இஸ்ரவேலரின் வேவுகாரர்களைப் பாதுகாத்ததின் மூலம் ராகாப் இந்தக் கொள்கையைப் பின்பற்றினாள் (11:31). அவள் தேவனுடைய ஜனங்களோடு சமாதானத்தை நாடினாள், அதன் விளைவாக அவர்களில் ஒருத்தியானாள். ராகாப் யூத மதத்திற்கு மாறின விசுவாசத்தைப் போன்று நாம் ஜனங்களைக் கிறிஸ்துவிடம் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

“சமாதானம்” என்பதற்கான பழைய ஏற்பாட்டு வார்த்தையானது (שָׁלוֹם, சாலோம்) என்பதாகும், இது வசனத்தில் அனைத்து விதத்திலும் நலமாக இருப்பதைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியிலுள்ள “சமாதானத்திற்கான” (εἰρήνη, ஐரின்) அழைப்பு என்பது பரிசுத்தத்தை அழைப்பதற்கு இணையாக இருக்கிறது. புதிய ஏற்பாடு முழுவதும் சமாதானத்தைத் தொடர வேண்டுமென்ற யோசனையானது வலியுறுத்தப்பட்டிருக்கிறது (காண்க ரோமர் 14:19 மற்றும் 1 பேதுரு 3:11). சமாதானம் பண்ணுதல் மற்றும் பரிசுத்தம் ஆகிய சிந்தனைகள் அடிக்கடி இணைந்தே காணப்படுகிறது (மத். 5:8, 9). இவைகள் கிறிஸ்தவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய முக்கியமான தகுதிகளாகும்.

இன்னும் அதிகமாகச் சுத்திகரிக்கப்படுவதற்கு அல்லது பரிசுத்தமாவதற்கு நாம் ஊக்கமாகத் தேட வேண்டும். “சுத்திகரிக்கப்படுதல்” (ἁγιασμός, *ஹெகியோஸ்மோஸ்*) என்ற வார்த்தையின் பொருள் “பிரித்தெடுக்கப்படுதல்” மேலும் பரிசுத்தம், வித்தியாசமாக இருத்தல் என்ற சிந்தனைகளையும் இணைக்கப் பெற்றிருக்கிறது. பரிசுத்தத்தை வளர்க்காத வரை, நாம் தேவனைப் போல இருக்க முடியாது. *ஹெகியோஸ்மோஸ்* என்ற வார்த்தை ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருக்கிற நிலையைக் குறிப்பிடும் விதமாகப் பவுலின் கடிதங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1 கொரி. 6:11). நாம் கிறிஸ்துவுடன் உறவு கொண்டுள்ளபடியால் இது நம்முடைய குணலட்சணமாக இருக்க வேண்டும்; இது இல்லாமல் நாம் கர்த்தரைத் தரிசிக்க முடியாது. அநேக மக்கள், சபையிலுள்ளவர்களும் கூட, சீர்கேட்டை விட்டு விலகி ஓடுவதிலும், பரிசுத்தத்தை நாடுவதிலும் தோல்வியடைகின்றனர். நாம் வசனங்கள் 16 மற்றும் 17 ல் பார்க்கிறபடி ஏசா ஒரு தவறான முன்னுதாரணமாக இருக்கிறான்,

1 தெசலோனிக்கேயர் 4:1-8-ல் இந்தப் பிரச்சனைக்கான சரியான தீர்வு காணப்படுகிறது, அங்கே பவுல் வேசித்தனத்தைப் பற்றி மிகவும் வெளிப்படையாகப் பேசுகிறார்.

“நேரான வழிகளை” பின்பற்றுவதின் அங்கமானது, சகோதரர்கள் மத்தியில் “சமாதானமாக” இருப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியின் ஒரு பகுதியாக இருக்கிறது. நித்திய இரட்சிப்பின் பயணத்தின் போது முரண்பாடான குழுக்கள் தவிர்க்க முடியாத பிரிவுகளைச் சபையில் ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது. இது ஒரு தொடர்ச்சியான ஆபத்தாகும், நாம் அவருடைய வழியைப் பின்பற்றாமல் போனால், இது சம்பவிக்கும்படிக்கு தேவன் அனுமதிப்பார். சகோதரர்களே, ஒருமனதாக இருப்பதற்கும் மற்றும் தங்களுக்குள்ள வேறுபாடுகளைத் தாங்களே தீர்த்துவைக்கும்படிக்குக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த கொள்கையைப் பவுல் 1 கொரிந்தியர் 6:1-8 ல் போதித்தார். “நாம் *பாவத்தோடு* போராடவேண்டுமேயொழிய *சகோதரரோடு* அல்ல. ...”[36]

இருப்பினும், சமாதானம் அடையும்படிக்குச் சத்தியத்தைச் சமரச விலையாகக் கொடுத்து பின்பற்றும் வழி அனுமதிக்கப்பட்ட வழியல்ல. ஒருவருடைய உபதேசம் தவறாக இருக்கும் பட்சத்தில் அவருடைய ஆராதனை வீணென்று இயேசு போதித்தார். தாங்கள் சொல்லுகிற மற்றும் செய்கிறபடியே மற்றவர்களைச் செய்யவும் சொல்லவும் வேண்டும் என்று கள்ள உபதேசக்காரர்கள் கூறும்போது அவர்கள் அனைவரும் ஒன்றாகக் குழியில் விழுவார்கள் (மத். 15:8-14). இறுதியாக, உண்மையான மற்றும் நீடித்திருக்கிற சமாதானமானது தேவனிடமிருந்து வர வேண்டும், ஏனெனில் அவரே “சமாதானத்தின் தேவனாக” இருக்கிறார் (காண்க எபி. 13:20).

முரண்பாடுகளுக்குக் காரணமானவர்கள் **கர்த்தரைக் காணமாட்டார்கள்**. இந்த வாக்குத்தத்தமானது எண்ணிப்பார்க்கவே பயங்கரமானதாக இருக்கிறது. “கர்த்தரை காண” முடியாமல் இருப்பதைச் செயல்படுத்தும் ஒருவன் நரகத்திற்கு நாடுகடத்தப்படுவான், என்று கூறுவது நரகத்தில் அழிக்கப்படுவதைச் சுட்டுகிறது, “கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி” இருப்பான் (2 தெச. 1:9). இது விசுவாச விலக்கத்திற்கு எதிரான தெளிவான எச்சரிக்கையாக இருக்கிறது.

அனைவரும் தேவனுடைய நியாயாசனத்தின் முன் நிற்பார்கள், ஆனால் அவரைக் “காண்பதென்பது” அவரோடு ஒன்றாக இருப்பது மற்றும் அவருடைய சமூகத்தில் மகிழ்ச்சியாக அனுபவிப்பதாகும். சுத்திகரிக்கப்படாத நிலையிலிருக்கிற - அதாவது அவர் இன்னமுதன் பாவத்திலிருக்கும் போது - ஒருவரும் ஒருபோதும், பரலோகத்தில் இதுவரையோ, அல்லது இனிமேலோ அனுமதிக்கப்படுவதில்லை, இனியும் அனுமதிக்கப்படவும் மாட்டார்கள் (யோவான் 8:21-24; வெளி.

21:27).

**வசனம் 15. நாடுங்கள்** (ἐπισκοποῦντες, *எபிஸ்கோபொன்டெஸ்*) என்ற வார்த்தையானது ἐπισκοπέω (*எபிஸ்போபியோ*) என்ற பெயர்ச்சொல்லின் தற்கால வினையெச்சமாக இருக்கிறது. இந்த வார்த்தையானது மூப்பர்களின் அலுவல்களைக் குறிப்பிட 1 பேதுரு 5:2 ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு காப்பாளர் அல்லது கண்காணியின் பணியை சுட்டுகிறது. சிலர் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கும் செயலை தடுக்கும் விதமாக "முழுச் சமுதாயமும்" விழிப்போடு இருத்தலை சுட்டிக்காட்டுகிறது.[37] **ஒருவனும்** தேவனுடைய கிருபையை **இழந்துபோகாதபடிக்கும்** என்பது இந்த உலகத்திலிருக்கிறவர்களைக் குறிப்பிட முடியாது, ஏனெனில் கிறிஸ்துவிற்கு புறம்பாயிருப்பவர்கள் ஒருபோதும் இழந்துபோக முடியாது. ஆகையால், உண்மையான கிறிஸ்தவர்கள் கூட சில நேரம் "விலக நேரிடும்" என்பதற்கு மற்றொரு எச்சரிக்கையாக இருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தன் ஆத்துமாவைப் "பார்க்க வேண்டும்" அல்லது மற்றவர்களுக்கு உதவும்படிக்கு "கண்காணிக்க" வேண்டும்.

ஒரு பயணி மற்றவர்களின் பின்னால் பின்தங்குதலை சித்தரிக்க இது பயன்படுத்தப்படுகிறது. இது ஆவிக்குரிய வாழ்வில் நடக்கும்போது, அப்படிப்பட்ட நபர் **தேவனுடைய கிருபையிலிருந்து** "இழந்துவிடுகிறார்," கூண்டு வண்டிக்கு பின்னால் ஒருவர் விழும்போது, திருடர்களாலும், பெலவீனத்தாலும், வியாதியாலும் மேற்கொள்ளப்படும் அபாயத்திலிருக்கிறார். ஒருவேளை இது சம்பவிக்குமானால், அவன் தன்னுடைய இலட்சியத்தின் முடிவை ஒருபோதும் அடைய முடியாது அல்லது தன்னுடைய வீட்டிற்கு மீண்டும் திரும்ப இயலாது. அதே போன்று பின்தங்குகிறவர்களை சாத்தான் மேற்கொள்ளக் கூடும். மோசஸ் ஸ்டுவர்ட் என்பவர் இப்பகுதிக்கு இவ்விதமாக வியாக்கியானம் கொடுக்கிறார்: "பரிசுத்தத்தின் விளைவாகிய தெய்வீக தயவை பெறுவதில் ஒருவரும் தவறிவிடாதபடிக்கு இதைச் சரியாகப் பாருங்கள்,"[38] எல்லா முன்னெச்சரிக்கைகள் மற்றும் கொடுக்கப்பட்ட சகாயத்தின் மத்தியிலும் சிலர் தேவ கிருபையை இழந்துவிடுகின்றனர். இது நடைபெறும்போது "அவருடைய கிருபையை செயல்படுத்த முடியாததாயிருந்தது கிருபையானது, கொள்ளப்படாமல் போகிறது, ஆனால் இதை பெற்றுக்கொள்ள அவர்கள் தங்களை இடமளிக்கிறவர்களாயில்லை, மற்றும் கிருபையினால் மட்டுமே கிடைக்கக் கூடிய இலட்சியத்தை அடைய தோல்வியடைந்து விட்டார்கள். ..."[39]

**கசப்பின் வேர்** என்பது சில பாவத்தின் வேர்களை குறிப்பிடக்கூடும். சீமோனின் "கசப்பான பிச்சானது" அவனுடைய பேராசையினால் வந்தது (அப். 8:23). உபாகமம் 29:18 ல் விக்கிரக நோக்கம் கொண்ட விசுவாச விலக்கமானது "நஞ்சையும் எட்டியையும்

முளைப்பிக்கிறதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது. புருஷர்களும் ஸ்திரீகளும் தங்கள் இருதயத்தை கர்த்தரிடமிருந்து திருப்பி மற்ற தேவர்களின் பின்னால் சென்று கொண்டிருந்தனர். எபிரெயர் 3:12 ல் இதே கருத்தானது "பொல்லாத இருதயம்" என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. இது மனம், ஆத்துமா ஆகியவற்றை சீர்கெடுக்கும் எந்தவொரு காரியத்தையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இதில் அகப்படுதல் அச்சுறுத்துவதாக இருக்கிறது:

> ஒரு விஷ வேரானது முழு பயிரையும் கெடுத்துப்போடுவதைப் போலவும் "சகதியும் வறண்டதுமான நிலத்தில் அழிக்கப்படுவான் என்ற மோசேயின் வார்த்தைக்கு வழிநடத்தப்படுகிறதுபோலவும்," அவர்கள் நடுவிலுள்ள கசப்பினால் நிறைந்த மற்றும் முரட்டாட்டமுள்ள ஒரு நபர் *பலரையும் தீட்டுப்படுத்த முடியும்*, அது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் அழிவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் (உபா. 29:19).[40]

இப்படிப்பட்ட வழிகளில் சபை உறுப்பினர்கள் **தீட்டுப்பட்டுவிடாதபடிக்கு** அவர்களை தடுக்க நாம் முயற்சிக்க வேண்டும். பிரச்சனை என்னவென்றால் "ஒரு வேரானது" அநேகத்தைக் கெடுத்துவிடும். ஒரு கள்ளப்போதகர், ஒரு சில வார்த்தையோடு, பலருடைய மனதில் சந்தேகத்தை விதைத்து அவர்களை "கெடுத்துவிடக் கூடும்."

**வசனம் 16.** இந்த சிந்தைனையானது வசனம் 15 ல் கூறப்பட்டுள்ள எச்சரிக்கையின் தொடர்ச்சியாக இருக்கிறது (மற்றும் 13:4-லும் மீண்டும் கூறப்பட்டுள்ளது). கிறிஸ்தவர்கள் பின்னுக்கு விழுந்து, தேவனுடைய கிருபையை இழந்துவிடக்கூடாது. பரிசுத்தத்தை வளர்த்து பாதுகாப்பவர்களுடைய வாழ்வில் இது நடைபெறாது.

பரிசுத்தத்தை நாட தவறியவர்களில் ***ஏசா*** ஒரு முதன்மையான எடுத்துக்காட்டாக இருக்கிறான். பழைய ஏற்பாட்டில் அவன் **சீர்கெட்டவன்** (πόρνος, *போர்னோஸ்*) என்று விவரிக்கப்படவில்லை, மாறாக அவன் தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றதில் திருஷ்டாந்தப்பட்டது போல, பரிசுத்தமான காரியங்களை அணுகுவதில் **தெய்வ பயமற்று** இருந்தான் என்பது ஆதாரமாக இருக்கிறது. அவன் "வேசித்தனக்காரன் அல்லது தேவ நிந்தனையான மனுஷன்" என்று NKJV மொழிபெயர்ப்பில் கூறப்படுள்ளது. கிரேக்க வார்த்தையானது "வேசித்தனக்காரன்" என்பதை விட சற்று விரிவான பொருளைக் கொண்டுள்ளது, "தேவனற்ற" (βέβηλος, *பேபேலோஸ்*) அல்லது "தேவ தூஷணக்காரன்" என்பதிலிருப்பது போன்று, ஒட்டுமொத்தத் தொகுப்பாகக் காணப்படுகிறது. உண்மையான மதத்தை அவமதிக்கிறவன், அடிக்கடி தன்னுடைய சொந்த இச்சையை நிறைவேற்றுகிறவனாக இருக்கிறான்; அவன் ஆவிக்குரிய காரியங்களின் மேல் மதிப்பை வைப்பதில்லை. வேசித்தனக்காரரும்

மற்ற தேவனற்றவர்களும் மனந்திரும்பாவிட்டால்; ஒரே விதமான நியாயத்தீர்ப்பை அடைவார்கள். அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் அனுமதிக்கும் அளவுக்கு சகித்துக் கொள்ளப்படக் கூடாதவர்களாக இருக்கிறார்கள் (1 கொரி. 5:9-11). சீர்கேட்டிற்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்கதவறுகிற சபையானது தேவனை விட்டு விலகி உலகத்தை நோக்குகிறது; வேதத்தினுடைய சட்டங்களுக்கு ஏற்ப கிறிஸ்தவர்கள் தங்களை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**வசனம் 17.** அந்நிய ஸ்திரீகளை மணந்து கொள்வதிலும், அவர்களுடைய தீய மற்றும் புறஜாதி தாக்கங்களின் மூலமாகவும் ஏசாவின் ஒழுக்கக்கேடான குணாதிசயமானது தெளிவாக சித்தரிக்கப்படுகிறது (ஆதி. 36:2, 3; 26:34, 35). அவன் தன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை விட பசியின் வலியை முக்கியமானதாக கருதினபோது அவனுடைய நடத்தையானது “தேவனற்றதாக” அல்லது “தேவதூஷணமானதாக” இருந்தது. அவன் பரிசுத்தமானதை அவமதித்தான். அவன் தன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை விட்டுவிடும்படிக்கு தேவன் அவனை வற்புறுத்தவில்லை, அவன் அதில் சுயமாகவே முடிவு செய்தான். அவன் “தேவனற்ற” இயல்பை தெரிவு செய்தபடியால் **ஆசீர்வாதங்கள்** அவனுடையதாக இருக்க முடியாது. அவன் தன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தையும், ஆசீர்வாதத்தையும் வெறும் தற்காலிகமான நன்மை தரக்கூடிய சாதாரண உணவிற்காக விற்றுப்போட்டான்.

ஆசீர்வாதம் என்பது குடும்பத்தை ஆராதனையில் வழிநடத்துவதில் உரிமை கொண்டவராக குடும்பத்தில் முதலிடம் வகிப்பது மட்டுமல்ல, ஆனால் சுதந்திரத்திலும் ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் இரட்டத்தனையான சுதந்திரத்தை பெறுதலுமேயாகும்.[41] ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் நிலையானது யாக்கோபிற்கு மிகவும் முக்கியத்துவமானதாக இருந்தது, ஆனால் ஏசாவிற்கோ அது மதிப்பற்றதாக இருந்தது. ஏசா ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்திருந்தால் அவனிடமிருந்து அந்த ஆசீர்வாதத்தை அவ்வளவு எளிதில் எடுத்துவிட முடியாது.[42] மறுபக்கத்தில் யாக்கோபு தெய்வீக ஆசீர்வாதங்களின் மேல் தன்னுடைய நன்மதிப்பை உயிரோட்டமாக வைத்திருந்தான். இது அவனுடைய கடைசி காலம் மற்றும் மோசமான நிலையிலும் கூட சாட்சியாக இருக்கிறது (11:20, 21).

சேஷ்ட புத்திர சுவிகாரமானது சர்வவல்லவருடைய ஆவிக்குரிய வழிகாட்டுதலின்படி கொடுக்கப்பட்டதால் தேவனுடைய சித்தத்தை மாற்றும் ஏசாவின் கசப்பான **கண்ணீரை** ஈசாக்கினால் அனுமதிக்க இயலவில்லை (ஆதி. 27:34). தான் ஏமாற்றப்பட்டதை ஈசாக்கு கண்டார்; ஆனால் தேவனுடைய சித்தத்தை அறிந்து, தன்னுடைய மூத்த மகன்

பரிதாபமாக கெஞ்சினபோதும் கூட அவர் தன்னுடைய மனதை மாற்றத் துணியவில்லை.

**மனந்திரும்புதல் என்பதற்கு** (μετάνοια, *மெடநோனியா*) வார்த்தையானது இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆசீர்வாதங்களை குறித்து தகப்பன் தன் மனதை மாற்றிக் கொள்ளக் கூடாமலிருந்தது. அவன் மனந்திரும்பினாலும் அந்த ஆசீர்வாதங்களை திரும்பவும் பெற தேவன் அவனை அனுமதிக்காதபடிக்கு ஏசா ஒரு பெரிய கோழைத்தனமான பாவத்தை செய்தான். இப்படிப்பட்ட நபருக்கு தந்தையின் அன்பானது தெய்வீக சித்தத்தை மேற்கொள்ள இயலவில்லை, ஆகவே ஏசா தன் மடத்தனத்தின் விளைவாக உபத்திரவப்படும்படிக்கு விடப்பட்டார். பாவத்தின் விளைவுகளை பிற்பாடு இல்லாமலாக்கி விடலாம் என்று நினைப்பவர்களுக்கு அவனுடைய வாழ்வானது ஒரு பெரும் பாடமாக இருக்கிறது; இது முற்றிலும் மாற்றப்படுவதற்கு ஒருபோதும் சாத்தியமில்லை.

ஒரு விசுவாசியினால் செய்யப்படுகிற விசுவாச விலக்கானது ஏசாவின் தீர்மானத்திற்கு இணையானது. ஒருவர் உபத்திரவத்தின் வலியை தற்சமயம் தவிர்க்கக் கூடும், ஆனால் அவன் தற்காலிகமான குறைந்த மதிப்புடையவைகளுக்காக விலையேறப் பெற்றவைகளை துறக்க நேரிடும். விசுவாச துரோகமானது சாத்தியமானது, மற்றும் இது தேவனுக்கு மிகவும் தீவிரமானதாக இருக்கிறது.

ஏசாவின் நிகழ்வானது வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதத்திலிருந்து விழுந்துபோகுதலுக்கு மற்றொரு எடுத்துக்காட்டாக இருக்கிறது (4:1 ல் கூறப்பட்டுள்ள "இளைப்பாறுதலைப்" போன்று). விசுவாச துரோகமானது விளைவுகள் நித்தியமானது மற்றும் விசுவாசத்திற்கு திரும்பும் விருப்பத்தையும் கொண்டிருக்கும் நிலைக்கு வந்தாலும், விரும்பின முடிவை நிறைவேற்ற முடியாததாக இருக்கிறது. ஏனெனில் ஏசாவின் இருதயத்திற்கொத்த ஒருவர் உண்மையாக மனமாற்றமடைவது சாத்தியமில்லாத ஒன்று. ஒரு முழுமையான விசுவாச துரோகம் செய்பவர் தேவனுடைய இரக்கத்தைப் பெறும் வாய்ப்பை முற்றிலும் இழந்து போகிறார். அவனுடைய விருப்பமில்லாமையினாலும் அவனுடைய இருதயத்தை இறுதியாக மாற்ற இயலாமையினாலும், தவறு செய்கிற சகோதரனுக்கு தேவன் தம்முடைய சித்தத்தை மாற்றிக் கொள்ள மாட்டார் (காண்க 6:4-6; 10:26-29).

## சீனாய் மலை மகிமைக்கும் சீயோன்/ "பரம எருசலேமின்" மகிமைக்கும் இடையேயான வேறுபாடு (12:18-24)

**18அன்றியும், தொடக்கூடியதும், அக்கினிபற்றியெரிகிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம் இருள் பெருங்காற்று ஆகிய**

**இவைகளினிடத்திற்கும், [19]எக்காள முழக்கத்தினிடத்திற்கும்,
வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும், நீங்கள் வந்து சேரவில்லை;
அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை
சொல்லப்படாதபடிக்கு வேண்டிக் கொண்டார்கள். [20]ஏனெனில் ஒரு
மிருகமாகிலும் மலையைத் தொட்டால், அது கல்லெறியுண்டு, அல்லது
அம்பினால் எய்யுண்டு சாகவேண்டுமென்று சொல்லப்பட்ட
கட்டளையைச் சகிக்கமாட்டாதிருந்தார்கள். [21]மோசேயும்: நான் மிகவும்
பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி
அவ்வளவு பயங்கரமாயிருந்தது. [22]நீங்களோ சீயோன்
மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம
எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான
தேவதூதர்களினிடத்திற்கும், [23]பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற
முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும்,
யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும்,
பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்,
[24]புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும்,
ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும்
நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும்
இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.**

இந்தப் பகுதியானது 12:18-29 ல் கூறப்படுகிற மற்றொரு எச்சரிக்கையாக இருக்கிறது. முதல் எச்சரிக்கையானது அலட்சியத்திற்கு எதிரானதாகும் (2:1-4), இரண்டாவதானது அவிசுவாசத்திற்கெதிரானதாகும் (3:7-4:13), மூன்றாவதாக விழுந்து போகுதலுக்கெதிரானதாகும் (5:11-6:20), மற்றும் நான்காவதாக வேண்டுமென்றே செய்கிற பாவத்திற்கு எதிரானதாகும் (10:26-31). ஐந்தாவது எச்சரிக்கை 12:18-29 ல் கூறப்பட்டுள்ளது, இது "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்" (12:25) என்று சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கலாம். தேவனுக்கு கீழ்ப்படிய மறுப்பது நித்திய அழிவை கொண்டுவருகிறது. கிறிஸ்துவுக்குள் உண்மையாக இருப்பதற்கும் மற்றும் வாசகர்கள் அவரை விட்டு விலகிப்போகாதபடிக்கும் இந்த எச்சரிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**வசனங்கள் 18, 19.** *சரீர* பிரகாரமாகச் *சீனாய்* மலையில் தேவனோடு உறவாடினவர்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்டதை விட மேலானது நம்முடைய பாக்கியங்கள். அவை ஏதோ தெளிவானதாக வந்திருந்தது, மேலும் **தொடக்கூடியதாக** இருந்தாலும் - அது தடைச் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் அணுகிய **மலையானது அக்கினியால்** எரிந்துக் கொண்டிருந்தது, மற்றும் அதைச் சுற்றிலும் **இருள்** சூழ்ந்திருந்தது (யாத். 19:16-19). அவர்கள் அனுபவித்த நிகழ்வுகள் ஜீவனுள்ள தேவன் மீது பயங்கரமான பயத்தை ஏற்படுத்தியுள்ளது,

அவைகள் தங்கள் நோக்கத்தை மிகச் சரியாகச் செய்தன. அக்கினி, **மேகம், புயல் காற்று மற்றும் எக்காளச் சத்தம்** ஆகியவை அந்தக் காலத்தில் தேவன் அணுகுதலுக்கு எவ்வளவு அப்பாற்பட்டவர் என்பதை வலியுறுத்துகிறது. புதிய உடன்படிக்கையின் அனைத்து ஆசீர்வாதங்களோடு இருக்கிறவர்கள், பழைய உடன்படிக்கைக்குத் திரும்ப விரும்புகிறார்கள் என்றால் அது நம்பக் கூடியதாகத் தோன்றவில்லை. மாறுபாடாக, நாம் ஆவிக்குரிய மலைக்கு வந்திருக்கிறோம். இது சரீரப் பிரகாரமாகத் தொடக் கூடியதல்ல, இது அதிசயமான நன்மைகளைக் கொண்டு வருகிற ஆவிக்குரிய சீயோன் மலையாக இருக்கிறது (12:22).

வசனம் 18-ல் **வந்து** என்ற வார்த்தையானது மனிதர் வருவது அல்லது தேவனிடம் கிட்டிச் சேருதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க 4:16; 10:1; 11:6). ஆராதனையாளர்கள் தேவனுக்கு முன்பாக வந்தனர் என்ற பழைய ஏற்பாட்டு யோசனைக்கு இது வலுவான மாறுபாடாக இருக்கிறது. தேவாலயத்தில் தேவனுக்கு முன்பாக வரும் யூத முறைமையானது நற்குணம் பொருந்திய பெரும் பாக்கியமுள்ளது என்று சிலர் தர்க்கம் பண்ணியிருக்கலாம், ஆனால் எபிரெய நிருபத்தின் ஆசிரியர் தேவனிடம் வருவது என்பது மிகவும் அதிசயமானது என்பதைக் காண்பித்தார்.

புதிய உடன்படிக்கைக்கான வாய்ப்புகளை மறுப்பவர்களுக்குத் தேவனுடைய மெய் அதிசயங்கள் ஒருநாளில் வெளிப்படும். பழைய உடன்படிக்கையின் கீழ், எக்காளத்தின் சத்தம் ஒருவேளை செவிகளைக் காயப்படுத்தியிருக்கலாம், அது மக்கள் அனைவருக்கும் அச்சத்தை ஏற்படுத்தியது ஆகவே அவர்கள் நடுங்கினர். தேவனுடைய எக்காளத்தின் இறுதி சத்தம் துன்மார்க்கரை எவ்வளவாகத் திகைக்கப்பண்ணும் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்! (காண்க 1 தெச. 4:16). தேவனுடைய சரீர உருவெளிப்பாட்டின் அதிசயத்தை நாம் அனுபவிக்கவில்லை. நாம் உண்மையாகவே நம்முடைய தேவனாகிய பிதாவினிடத்தில் வரக்கூடும் (12:23).

**வசனங்கள் 20, 21.** பழைய உடன்படிக்கையின் வெளிப்பாடுகள் பணிமுட்டுகள் சார்ந்தவைகளில் அதிகச் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன (எபி. 9:11, 24); ஆனால் புதிய உடன்படிக்கையானது ஆவிக்குரிய ரீதியில் தொடக்கூடியதாகிய பரம எருசலேம் போன்ற மிகவும் உயர்ந்ததும் மற்றும் பரிசுத்தமுமான காரியங்களில் அதிகக் கவனம் செலுத்துகிறதாக இருக்கிறது. இது தேவனுடைய பிரசன்னத்தின் உருவகமாக இருக்கிறது, அவரிடத்தில் நாம் தைரியமாகக் கிட்டிச் சேர முடியும் (எபி. 4:16; 9:24). எபிரெயரில் "இங்கும் (9:11, 24; காண்க 8:5) மற்ற இடங்களிலும்; குறிப்பிட்டிருப்பது என்பது காணக் கூடாதவைகளைவிடச் சரீரப்பிரகாரமான கீழானவைகள் என்ற கிரேக்க பாரம்பரியத்தைப் பின்பற்றினர்."[43]

இதன் ஆசிரியர் தாழ்வானவைகளிலிருந்து மேன்மையானவைகளைத் தொடர்ந்து விவாதித்தார்: நிஜ மலைக்கு மதிப்பு கொடுக்கப்பட்டதும் மற்றும் மோசே பயந்ததும் உண்டானால், பரலோகத்திற்குரியவைகளுக்கு எவ்வளவு அதிக மதிப்பு கொடுக்க வேண்டும்!

**மிருகமானாலும் சரி. மனிதனானாலும் சரி. உயிரோடே வைக்கப்படலாகாது** என்ற மூல கட்டளையானது யாத்திராகமம் 19:12, 13-ல் கூறப்பட்டுள்ளது. எபிரெய மூலபாஷையிலிருந்து இந்தச் சொற்றொடொரானது குறிப்பிடப்பட்டுள்ளது. அம்பு கொண்டு "சுடுவது மூலம்" என்று கூடுதல் கவனத்துடன் குறிப்பிடுவதைவிட "கல்லெறியப்படும்" என்று மொழிபெயர்ப்பது சிறந்தது ஆகும். (KJV யிலுள்ள இந்தப் பிந்தைய வெளிப்பாடானது பல பண்டைய கையெழுத்துப் பிரதிகளிலில்லை; ஒரு யூத பாரம்பரியத்தின் காரணத்தினால் இது சேர்க்கப்பட்டிருக்கக் கூடும்.)

பழைய ஏற்பாட்டில் இந்த இடத்தில் மோசேயின் **பயமும் நடுக்கமும்** என்று கூறப்படவில்லை, ஆனால் உபாகமம் 9:19-ல் "கர்த்தர் … கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் ஸ்தேவான், பற்றியெரியும் செடியிடம் போவதற்கு "மோசே நடுக்கமடைந்து, உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான்" என்று குறிப்பிடுகிறார் (அப். 7:32; மற்றும் யாத். 3:6 காணவும்). யாத்திராகமம் 19:16 சொல்கிறது, மக்கள் அனைவரும் பயந்தார்கள். இது யூத எழுத்துக்களில் அடிக்கடி காணப்படுவதும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சத்தியமாகவும் இருக்கிறது. மலைக்கு அருகில் கிட்டிச் சேருவதை விட்டு, இஸ்ரவேலர்கள் தேவனுடைய உருவெளிப்படுதலின் சமூகத்திற்குப் பயந்து பின்வாங்கினார்கள். இப்படிப்பட்ட தேவனுடைய பிரசன்னத்தின் செயல்விளக்கமானது அவருடன் ஐக்கியப்படுதலானது பாவத்தினால் தடைப்படும் என்பதை இஸ்ரவேலர்கள் மீது ஆழமாகப் பதிய வைத்துள்ளது.

**வசனங்கள் 22-24.** பரிசுத்தவான்கள் வந்தார்கள், இப்போது **சீனாய் மலையில் பிரவேசித்தார்கள்** என்று விவரிப்பது மூலம் பழைய உடன்படிக்கை மீதும் உயர்வானதாகப் புதிய உடன்படிக்கை இருக்கிறது என்பதை இந்த வசனங்கள் அறிவிக்கின்றன. "நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்" என்ற வார்த்தையானது (வசனம் 22) மனமாறிய ஒரு மனிதனை குறிப்பிட (προσέρχομαι, *ப்ரொசெர்கொமோய்*),[44] என்ற மூல வார்த்தையின் சொல்லிலிருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் வசனம் 22 அநேகமாக மனமாற்றத்தின் புள்ளியைக் குறிப்பிடுகிறது. சொல்லானது *ப்ரொசெர்கொமோய்* என்ற வினைச் சொல்லின் வடிமானது பன்மையாகவும் சரியான காலத்தைக் குறிப்பிடுகிறதாகவும் இருக்கிறது, இதன் பொருள் என்னவென்றால் "அவர்கள் [பின்வாங்க]

தொடங்கி அதிலே தொடர்ந்தனர்" என்பதாகும். பரிசுத்தவான்கள் நிரந்தரமாக ஒரு இடத்திற்கு வந்துள்ளனர், அது தான் அவர்களுடைய இடம். "பழைய உடன்படிக்கையின் தற்காலிக நிபந்தனைகளெல்லாம் முடிவுற்றது, மேலும் புதிய உடன்படிக்கையின் நித்திய சட்டங்கள் தற்போது தொடருகிறது"; இனியும் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது.[45] நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அந்த முறைகளிலிருந்து திரும்பி தற்போது கிறிஸ்துவுடன் தொடர்கிறவர்களாக இருக்கின்றனர். கிறிஸ்துவிடம் *வருவதில்*, அவர்கள் புதிய உடன்படிக்கை கொடுத்த எல்லா உரிமைகளுக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

1. அவர்கள் சீனாய் மலைக்கு மாறாகச் சீயோன் மலைக்கு வந்திருந்தனர், சீயோன் என்பது மலை அங்கே பழைய எருசலேம் கட்டப்பட்டிருந்தது, ஆனால் இது ஒட்டுமொத்த பரிசுத்த நகரத்தையும் குறிப்பிடும் விதமாகப் பயன்படுத்தப்பட்டது. இராஜரீக மற்றும் ஆசாரியத்துவ அதிகாரத்தின் பீடமாக இருந்தது, இது "பரிசுத்த சீயோன் பர்வதம்" என்று அழைக்கப்பட்டது (சங். 2:6; KJV). இது பூலோக பரிசுத்த ஸ்தலமாக இருந்தது.[46] புதிய ஏற்பாட்டில், சீயோன் **பரம எருசலேமைக்** குறிப்பிடுவதாக இருக்கிறது (காண்க வெளி. 3:12; 21:2) மற்றும் "மேலான எருசலேமின்" தேவனுடைய வாசஸ்தலத்தையே இது குறிப்பிடுகிறது (கலா. 4:26).

2. பரலோகமானது பூமியிலிருக்கிற ஒரு பட்டணமாக இருக்க இயலாது, ஆனால் இந்தச் சகோதரர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பிரவேசித்ததினால் பரிசுத்த ஸ்தலத்தில் ஏற்கெனவே வந்துவிட்டனர். இது ஒருவர் மெய்யான "சீயோனை" வந்தடைந்ததன் மூலம் இரட்சிப்பிற்குள் வந்துவிட்டார். இறுதியில் நாம் பரலோகத்தை அடைவோம் ஏனெனில் அதன் அங்கமாகிய நம்முடைய கர்த்தருடைய சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறோம். இவ்விதமாக நாம் **ஜீவனுள்ள தேவனுடைய பரிசுத்த நகரத்திற்குள்** வந்திருக்கிறோம்.

3. இந்த நகரத்திற்குள் வருகையில், நாம் **எண்ணற்ற தேவதூதரிடத்திற்கு** வந்தடைந்தோம் (வசனம் 22). மைரியாட்ஸ் எண்ணிக்கையற்ற என்பதைக் குறிப்பிடுகிறது. ஒரு பாவிகள் மனந்திரும்புகையில் தேவதூதர்கள் மகிழ்ச்சியடைகின்றனர் (காண்க லூக். 15:7, 10); அவர்கள் பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தின் தேவனுடைய பிள்ளைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் (மத். 18:10), மேலும் அவர்கள் இரட்சிப்பின் சுதந்திரவாளிகளுக்குச் சேவை செய்கிறவர்களாக இருக்கின்றனர் (காண்க எபி. 1:14). நாம் சபையில் அவர்களிடம் வந்துள்ளோம், ஆனால் தடை செய்யப்பட்டவைகளை ஆராதிக்க வரவில்லை (வெளி. 22:8, 9). மாறாகத் தற்காலத்தில் நாம் ஒன்றும் அறியாத வழியில் அவர்கள் நமக்கு உதவிச் செய்கின்றனர். அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தை விட்டு அனுப்பப்பட்டப்போது

நமக்குப் பணிவிடை செய்கின்றனர், ஆனால் அவரைத் துதிக்கும் விதமாக அதிசீக்கிரத்தல் திரும்பி செல்வர் (வெளி. 5:11; 7:11; 19:6).

4. இதற்குக் கூடுதலாக, **நாம் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கு வந்திருக்கிறோம்** (வசனம் 23). இங்கு "சங்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற வார்த்தையானது "சபையாக" இருக்கிறது. *எக்லீசியா* என்பதைச் சபை என்று நாம் அறிந்திருக்கிறப்படியால், நாம் அதற்குள்ளும் ஏற்கெனவே வந்துவிட்டோம். "பொதுச் சங்கம்" (πανήγυρις, *பனெர்குரிஸ்*) மற்றும் "சபை" (ἐκκλησία, *எக்கலீசியா*) ஆகிய வார்த்தைகள் அநேகமாக ஒரே அமைப்பைக் குறிப்பிடுவதாக இருக்கக் கூடும்; ஆயினும் "பொதுச் சங்கம்" என்பது பழைய ஏற்பாட்டு காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்ளையும் உள்ளடக்கியிருக்கிறது. "சங்கம்" என்ற வார்த்தை சில கடவுளை கனப்படுத்துகிற தேசிய கொண்டாட்டத்தைச் சுட்டிக்காட்டுகிறது, மேலும் அது எந்த ஒரு கொண்டாட்ட கூடுகையையும் பொருள்படுத்துவதாக அமைந்துள்ளது. சபையின் கூடுகையானது எப்போதும் பண்டிகை கொண்டாட்டங்களின் கூடுகை போன்றது என்று கருதுவது மிகவும் அதீதமானது ஆகும்.

கிரேக்க மூல எழுத்துக்களில் எவ்விதமான நிறுத்த குறிகளும் இல்லாதபடியால், "பொதுச் சங்கம்" என்று வாக்கியத்தில் மற்ற வார்த்தையோடு தொடர்புப்படுத்துகிற விதத்தில் சில கேள்விகள் எழுகின்றன, வசனம் 22ல் NIV மொழிப்பெயர்ப்பானது "ஆயிரமாயிரம் தேவதூதர்களின் மகிழ்ச்சியின் சங்கத்தில் இருப்பதாக" என்று இந்தச் சொற்றொடொரில் இடம்பெற்றுள்ளது. NASB மொழிபெயர்ப்பானது வசனம் 23ல் இதைச் சபையோடு இணைக்கிறது. ஒருவேளை இது சபையோடு தொடர்புப்படுத்தப்பட்டிருக்கும் ஏன்றால். இந்தக் கூடுகையானது பொதுவான ஐக்கியத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

சபை உறுப்பினர்களின் பெயர்கள் "பரலோகத்தில் பதிவு" செய்யப்பட்டுள்ளன (காண்க லூக். 10:20; பிலி. 4:3; வெளி. 21:27). மேலும், கிறிஸ்தவர்கள் முதற்பேறானவர்களாக (πρωτότοκος, *ப்ரோடொகோஸ்*)[47] இருக்கின்றனர். சபையானது கிறிஸ்துவிற்குள்ளிருக்கிற மறுபிறப்படைந்தவர்களின் தொகுப்பாக இருக்கிறது. வசனங்களானது பரலோகத்தின் புத்தகச் சுருள் தேவதூதர்களையல்லாமல் மனிதர்களையே சம்பந்தப்படுத்துகிறது.[48] நம்முடைய பெயர்கள் "பரலோகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது" அற்புதங்கள் செயல்படுத்தும் வல்லமையான மகிழ்ச்சியின் ஆதாரமானதாக லூக்கா 10:20 சுட்டிக்காட்டுகிறது.

5. கிறிஸ்தவர்களாக, **எல்லாருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடம்** நாம் வந்திருக்கிறோம் (வசனம் 23). சபையில் நாம் பிதாவினிடத்திற்கு வந்து, அவரை உறுதியான தைரியத்தோடு

அணுகியிருக்கிறோம் (4:16). பிதாவினிடம் செல்லும் வழியாகத் தாம் இருப்பதாக இயேசு சொன்னார் (யோவான் 4:16). நாம் தேவனிடம் வந்து இருக்கிறப்படியால், அவருடைய சபையில் நிலைத்திருந்து அவருடைய அருகிலேயே இருப்பதற்குப் பரிசுத்தமான வாழ்வை வாழ பாடுப்பட வேண்டும். இயேசுவின் மூலமாகத் தேவனால் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (அப். 17:30, 31). மக்கள் அலட்சியம் செய்யவும், புறக்கணிக்கவும் இயேசு சபைக்கான தம்முடைய இரத்த விலைக் கிரயத்தைச் செலுத்தவில்லை (அப். 20:28).

6. நாம் **பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கு வந்திருக்கிறோம்** (வசனம் 23). கிறிஸ்தவக் காலத்திற்கு முன்பாகவே இவர்கள் விசுவாசிகளாக இருக்கின்றனர், ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் தற்போது பூரணராக்கப்பட்டவர்கள் (9:15; 10:14; 11:40), உயிரோடு இருக்கிற அல்லது மரித்த அனைவரும் புதிய ஏற்பாட்டுக் காலத்துப் பரிசுத்தவான்களுடன் சேர்க்கப்படலாம். மரித்தவர்கள் அடிக்கடி ஆவிகளென தள்ளுபடி ஆகமங்களில் அழைக்கப்படுகின்றனர்.[50] யூத ஆசிரியர்கள் மரித்த ஆவிகள் காத்திருக்கும் இடத்தைப் பற்றிப் பேசினார்கள்; இது பொதுவான அர்த்தமாக இருக்கிறப்படியால், இதே அர்த்தத்தில் இதை இங்கு யூகிக்க வேண்டும். வெளிப்படுத்தின விசேஷம் 7:14-17-ல் இந்த ஆவிகளுக்குப் பரிசளிப்பதைப் பற்றிப் பேசக் கூடும். கிறிஸ்து பூரணராக்கப்பட்டிருக்கிறார் (2:10), மேலும் அவரைப் பின்பற்றுகிற நாமும் அவர் மூலமாகப் பூரணராக்கப்பட்டிருக்கிறோம்.

7. இறுதியாக, நாம் **புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து** இருக்கிறோம் (வசனம் 24). நாம் சபையில் புதிய உடன்படிக்கையின் கீழ் தேவனிடத்தில் வரும்போது கிறிஸ்துவிடம் வருகிறோம். நம்முடைய மத்தியஸ்தராகிய, கிறிஸ்துவே, தேவனிடமிருந்து புதிய உடன்படிக்கையைக் கொண்டுவந்திருக்கிறார் (9:15-17). பழைய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படுகையில் இரத்தம் தெளிக்கப்பட்டது (யாத். 24:6-8), மேலும்; நம்முடைய பாவ மனச்சாட்சியைச் சுத்திகரிப்பதற்குக் கிறிஸ்துவின் இரத்தமானது தெளிக்கப்பட்டது (எபி. 10:22). கிறிஸ்துவின் இரத்தமானது “ஆபேலின் இரத்தத்தை விட மேன்மையாகப் பேசுகிறது” ஏனெனில் அதன் கிருபை நிறைந்த செய்திகள் அதிகமான நன்மையளிக்கிறது. ஆபேலின் இரத்தம் நீதிக்காக மட்டுமே சத்தமிடுகிறது (ஆதி. 4:10). உண்மையாகவே கிறிஸ்துவின் இரத்தமானது மிகுந்த “கிருபை நிறைந்தவைகளை” (RSV) அல்லது “சிறப்பானதை” (κρείττων, *க்ரெய்ட்டோன்*) பேசுகிறது. இந்தப் புதிய மற்றும் சிறந்த உடன்படிக்கையானது எரேமியா

தீர்க்கத்தரிசியால் வாக்குப்பண்ணப்பட்டு (31:31-34), இந்த நிருபத்தின் கருப்பொருளாக இது இருக்கிறது. நம்முடைய மீட்பிற்காகச் சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தை அல்லாமல் எந்தப் புதிய உடன்படிக்கையும் செயல்பட முடியாது (மத். 26:28).

## இறுதி எச்சரிக்கை: தேவனை மறுப்பதின் ஆபத்து (12:25-29)

**25பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப் போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்? 26அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார். 27இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள்போல் மாறிப்போகும் என்பதைக் குறிக்கிறது. 28ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். 29நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே.**

ஐந்தாவது மற்றும் இறுதி எச்சரிக்கையின் மையப்பொருள் எபிரெயர் 12:25-29-ல் உள்ளது. அநேகமாக இது 3:7-11 ல் கூறப்பட்டுள்ளதற்கு (இது எல்எக்ஸ்எக்ஸ் சங்கீதம் 95:7-11 லிலிருந்து மேற்கோளிடப்பட்டிருக்கிறது) ஒத்ததாக இருக்கக் கூடும்.

மற்றொரு "எளிய மற்றும் வலிய" விவாதம் இந்த வசனங்கள் முன்னர் 2:1-4-ல் பயன்பட்டதுப்போன்றே காணப்படுகிறது (காண்க 2:3-ன் விளக்கம்). "பார்" (βλέπω, ப்ளெப்பொ) என்ற வார்த்தையானது 3:12-ல் "கவனித்துக்கொள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைக்கு ஒத்திருக்கிறது ("கவனத்தில் கொள்ளுங்கள்," KJV; "எச்சரிக்கையாக இருங்கள்," NKJV). சீனாய் மலையில் பிதாவாகிய தேவனுக்கு இஸ்ரவேல் செவிகொடுத்ததை விட அதிகமாக - ஒவ்வொரு பரிசுத்தவானும் கர்த்தருக்கு கண்டிப்பாக செவிகொடுக்க வேண்டும்.

**வசனம் 25.** இந்த வசனம் 10:26-29-ல் இருக்கிற தேவதூஷண சம்பந்தமான தண்டனைக்கான விவாதமாகிய "குறைவானதிலிருந்து மேன்மையானது" என்பதற்கு ஒத்திருக்கிறது. முதலாவது ஆசிரியர் சொல்கிறார், **பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.** மோசேயைவிட மேலாகக்

கிறிஸ்துவே நம்முடன் பேசுகிறார்; மேலும் நம்முடைய கர்த்தருடைய எச்சரிக்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. என்னைப் போல ஒரு தீர்க்கதரிசி எழும்புவார் என்ற மோசேயின் தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றினார் (உபா. 18:15, 18, 19). இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவிற்குள் நிறைவேறினதாகப் பேதுரு மேற்கோளிடுகிறார்; அவருக்குச் செவிக் கொடுக்காதவர்கள் "தேவனுடைய ஜனத்திலிருந்து அறுப்புண்டுப் போய் முற்றிலும் அழிக்கப்பட்டு விடுவார்கள்" (அப். 3:22, 23; NLT). கிறிஸ்துவை அங்கீகரிக்கும் விதமாக "இவருக்குச் செவிகொடுங்கள்!" (மத். 17:5; மாற்கு 9:7; லூக். 9:35) என்று கூறி தேவன் பரலோகத்திலிருந்து பேசியிருக்கிறார். புதிய தீர்க்கதரிசியாகிய, தேவனுடைய குமாரனுக்குச் செவிகொடுக்க மறுப்பது, "அறுப்புண்டு" போகுதலில் விளைவை உண்டுபண்ணும்.

மக்கள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதபோது மிகவும் பாடுபட்டதாக வனாந்திர அலைந்து திரிந்தலின் பதிவுகள் காட்டுகிறது. தேவனுடைய எச்சரிக்கைகள் மிகவும் தீவிரமானவைகள் என்பதை அவர்கள் உணர்ந்துக் கொண்டனர். தேவன் தற்போது தம்முடைய குமாரன் மூலம் நம்மோடு பேசுகிறார் (1:2); நிச்சயமாகவே, அவருடைய செய்தியானது அப்போஸ்தரின் வழியாகவும் வெளிப்படுத்தப்பட்ட எழுத்துக்களின் வழியாகவும் நமக்கு வருகிறது. இவற்றின் மூலமாகவும் நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

**எச்சரிக்கப்பட்டது** "பேசுதல்" என்பதைவிட மாறுபட்டதாகும் இது (χρηματίζω, *க்ரெமடிசொ*) என்ற வார்த்தையின் ஒரு வடிவமாகும், இதே வார்த்தையானது 8:5-லும், 11:7-லும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது "அழைத்தல்" என்று அப்போஸ்தலர் 11:26 ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஒருவேளை ஒரு தெய்வீக கடிந்துக் கொள்ளுதலாக இருக்கக் கூடும். தேவன் தம்முடைய வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையின் ஒரு பகுதியாகிய இந்த நிரூபத்தின் வாயிலாகப் பேசிக்கொண்டிருக்கிறார், குறிப்பாகத் தம்முடைய குமரானின் பலியைக் குறித்துப் பேசுகிறார். மனந்திரும்புதலுக்கான எச்சரிப்புகள் வசனங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன (லூக். 13:3; அப். 17:30, 31), இதன் மூலமாகவே தேவன் இன்றும் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறார்.

**வசனம் 26.** சீனாய் மலையில் தேவனுடைய **சத்தமானது** பூமியதிர்ச்சியை உண்டுப் பண்ணுகிற அளவிற்கு வல்லமையுள்ளதாக இருந்தது (யாத். 19:18): **இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன்.** சங்கீதக்காரன் பூமியின் நடுக்கத்தைப்பற்றிப் பேசினார் (சங். 68:8; 114:7).[51] இங்கு மேற்கோளிடப்பட்டிருக்கிற ஆகாய் 2:6, 7, மேசியாவின் காலமானது தேவன் பூமியையும் வானத்தையும் அதிரப்பண்ணுதலை பற்றிக் கூறுகிறது (இயேசு இந்தக் கருத்தை பேசியிருக்கிறார் மத். 24:29;

காண்க மாற்கு 13:25 மற்றும் லூக். 21:26). ஏசாயா 13:13-ல் ஏறக்குறைய இதே வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது: “இதினிமித்தம் சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்தினால் அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே பூமி தன்னிடத்தை விட்டு நீங்கும்படி வானத்தை அதிரப்பண்ணுவேன்.”[52]

**வசனம் 27.** இந்த வசனமானது ஆகாய் 2:6-லிருக்கிற மேற்கோளின் சுருக்கமான வியாக்கியானமாக இருக்கிறது. சிலர் இந்தப் புதிய அதிர்வு குறிப்பை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது வானமும் பூமியும் முற்றிலும் அழிக்கப்படுகின்ற (அல்லது **அதிரப்பண்ணுகிற**) உலக அழிவைக் குறிப்பிடுவதாக யூகிக்கிறார்கள், ஆயினும், ஆபகூக்கின் இந்த வசனத்தைத் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஒப்பிட்டு கூறுவது “இந்த வசனப்பகுதியின் உண்மையான வலியுறுத்தலாகிய - மோசேயின் உடன்படிக்கையானது கிறிஸ்துவின் முதல் வருகையினால் அதிரப்பண்ண (அகற்றப்பட) வேண்டும் என்பதைத் திருடுவதுப் போன்றதாகும்”[53] ஆகாய் 2:7-ல் கூறப்பட்டுள்ள “ஜாதிகளின் சுகபோகங்கள்” என்பது நிச்சயமாக மேசியாவையும் அவருடைய வருகையையும் குறிப்பிட வேண்டும், இது தேவாலயத்தினுடைய மிகப் பெரிய மகிமையை அடையக்கூடும்.[54] பழைய உடன்படிக்கையானது அசைக்கப்படும்; நாம் காணக்கூடிய உலகம் அழிக்கப்படுவதுப் போல அது **அகற்றப்படக்** கூடும். இதற்கு மாறாகப் புதிய உடன்படிக்கையானது அசைக்கப்பட இயலாது அகற்றப்பட இயலாது அல்லது மாற்றப்பட இயலாது.

நித்திய மற்றும் ஆவிக்குரியவைகளை அமைக்கவே கிறிஸ்து வந்தார். ஆவிக்குரிய பிறப்பினால் மட்டுமே அவருடைய புதிய உலகத்தில் பிரவேசித்தல் என்பது நிகழ்கிறது (யோவான் 3:3-5). நமக்குரிய தேவனுடைய நித்திய நோக்கத்தைப் பெற நாம் ஆவிக்குரிய வாழ்வில் வளருவதைத் தொடர வேண்டும் (2 பேதுரு 3:10, 11). **சிருஷ்டிக்கப்பட்டவைகள்** ஒரு நாளில் நித்தியமானவைகளுக்கு இடமளிக்க வேண்டுமென்பதன் நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டது. **மீண்டுமொரு முறை** என்பது “இன்னும் ஒரு முறை மட்டும்” தேவன் இந்த உலகத்தை அகற்றப் போகிறார் என்று பொருளாகும் (2 பேதுரு 3:10, 11).

இந்த “அதிரப்பண்ணுதலை” கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் இந்த உலகத்தின் பழைய முறையை மாற்றுவது என்று கூறி இது வெறும் உருவகமென்று சிலர் கூற முயற்சிக்கின்றனர். இவைகளுக்குப் பின்பு, பவுல் இந்த உலகத்தைக் கலக்கவில்லையா? (காண்க அப். 17:6.) ஆயினும், இந்த வசனமானது காணக்கூடியவைகள் அகற்றப்பட்டுவிடும், ஆவிக்குரியவைகளோ **நிலைத்து** இருக்கும். காணக்கூடியவைகளாகிய கள்ள மதங்கள் உலக அதிகாரங்கள் போன்ற அசைக்கப்படுகிறவைகளை உள்ளடக்கியதே

“சிருஷ்டிக்கப்பட்டவைகள்” ஆகும். “ஆவிக்குரிய காரியங்கள்” நிலைத்து நிற்கும். இவற்றில் தேவனுடைய இராஜ்ஜியமும், மற்றும் அதற்குக் கீழான அனைத்தும் உள்ளடக்கியது ஆகும்.

**வசனம் 28, 29.** நம் அனைவருக்கும் நித்தியமானதும் மற்றும் **அசைக்கப்படாததுமான** ஒன்று அவசியமானதாக இருக்கிறது. தேவனுடைய மற்றும் கிறிஸ்துவின் **இராஜ்ஜியத்தின்** தேவைகளுடைய நிறைவேறுதல் நம்மிடம் அளிக்கப்பட்டிருக்கிறது (எபே. 5:5). வெகு விரைவில் எருசலேமின் சுவர்களைத் தகர்க்க வரப்போகிற இந்த அசைக்கப்படாத இராஜ்ஜியமானது, பலமாகத் தாக்கும் ஆட்டுக்கடாவாகிய ரோமாபுரிக்கு பதிலாக வைக்கப்படக் கூடுமோ? இந்தக் காணக்கூடிய உலகத்தின் மாறக்கூடியவைகளுக்கு வேறுபட்டுக் கிறிஸ்துவின் இராஜ்ஜியமானது நித்தியமானதாகவும் அழிக்கப்படக் கூடாததாகவும் இருக்கிறது. தானியேல் 2:44 மற்றும் 7:14-ல் அழிக்கப்படக் கூடாத இராஜ்ஜியம் குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இராஜ்ஜியமாகிய சபை “பாதாளத்தின் கதவுகளையே” மேற்கொள்ளும் (மத். 16:18). எல்லாப் பட்டணத்து சுவர்களும், கதவுகளும் உடைக்கப்பட்டுத் தள்ளப்படும், ஆனால் நம்முடைய தேவனுடைய மற்றும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தினுடையவைகள் அழிக்கப்படாது.

இந்த வசனம் இராஜ்ஜியம் ஏற்கெனவே இருப்பதாகப் பிரகடனப்படுத்துகிறது. சபையைப் போன்றே அந்த இராஜ்ஜியமும் அதே விதமான மக்களை உள்ளடக்கியுள்ளது. அப்போஸ்தலர் 1:3-8 வரையுள்ள வசனங்களில் இந்த இராஜ்ஜியமானது இன்னமும் எதிர்காலத்திலுள்ளது; ஆனால் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னர் அது நடைமுறையில் இருக்கும் என்பது தெளிவாக இருக்கிறது (கொலோ. 1:13; வெளி. 1:5, 6, 9). தற்கால இராஜ்ஜியத்தின் இருப்பைக் குறித்த சத்தியத்தை நாம் கண்டிப்பாக அலட்சியப்படுத்தக் கூடாது.

வசனம் 28 **இருப்போமாக** என்ற மற்றொரு உற்சாகப்படுத்துதலை கொண்டுள்ளது. நாம் கிருபையைப் பெற்றுக் கொள்ளும் சூழலை காத்துக்கொள்ளப் போராட வேண்டும். “உறுதியாக பற்றிக் கொள்ளக்கடவோம்” (10:23) என்பது இதை வேறுவிதத்தில் கூறுவதாகும். 12:18-ல் தொடங்கிய இந்த எச்சரிக்கையானது, 10:25 லுள்ளது போன்று, ஒருவேளை ஆராதனையைக் கைவிட்டுவிடக் கூடாதென்ற வலியுறுத்தலை உள்ளடக்கியிருக்கக் கூடும். இது தேவன் கீழ்படியாமையைச் சகித்துக் கொள்கிறவர் அல்ல: “உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்” என்பதைச் சுட்டிக்காட்டுகிற உபாகமம் 4:24-ன் மேற்கோளோடு 29 ஆம் வசனத்தில் நிறைவு பெறுகிறது.[55]

**பட்சிக்கிற அக்கினியாகிய** தேவன் என்பது வேதத்தில் தனிமைப்படுத்தப்பட்ட சிந்தனையல்ல (காண்க ஏசாயா 33:14). பல

வசனப்பகுதிகள் "அக்கினியை" பற்றிக் குறிப்பிடுகிறது, மேலும் அவை எல்லாவற்றையும் உருவகப்படுத்துவது கடினம். இப்பகுதியில் அல்லது 10:26-29 ல் காணப்படுகிற "அக்கினியானது" வெறும் உருவகமானது என்று கூறுவதற்கு எந்த ஆதாரமுமில்லை.

நாம் தேவனுக்கு **ஏற்ற விதத்தில் ஆராதனை** செய்ய வேண்டும். "சேவை" (λατρεύω, *லட்ரியோ*) என்ற ஒரு வார்த்தையின் வடிவமானது முன்பு ஆசாரியர்கள் ஆராதனையில் பயன்படுத்தப்பட்டது (8:5), மேலும் 13:10 ல் ஒரே வகையான வினைச்சொல்லின் வடிவம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையானது மற்ற ஆராதனையாளர்களைக் குறிப்பிடவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (9:9; 10:2). இந்த வார்த்தை ஆராதனையையும் இணைத்திருந்தாலும், இது பொதுவாக "மத இயல்போடு பணி செயதல்" என்று பொருள் தருகிறது. (13:1-3 லிருப்பதுப் போல) இது மற்றவர்களைக் கவனத்தில் கொள்ளும் செயல்களைக் குறிப்பிடக் கூடும், மேலும் உபசரித்தல், சிறைவாசிகளுக்கு உதவிச் செய்தல், திருமணத்தைக் கனப்படுத்துதல், மற்றும் வேசித்தனத்தையும் வஞ்சகத்தையும் தவிர்த்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியது ஆகும் (13:1-6).

தேவனுடைய பரிசுத்தத்திற்குப் **பயபக்தி மற்றும் பிரமிப்பு** ஆகியவை "அவருடைய இரக்கத்திற்கு மறுமொழியாக நன்றியுணர்வோடும் அன்போடும் செய்யத் தகாதவையல்ல."[56] தேவனுடைய பிரஸ்தாபம் மற்றும் பரிசுத்தம் என்பது அவரைப் பிரமிப்போடு பற்றிக் கொள்ளுதலின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த "பிரமிப்பானது" தேவன் நமக்கு எதைச் செய்யக் கூடும் என்னும் பயத்தையும் உள்ளடங்கியது ஆகும். அக்கினியினால் தண்டிக்கிற பயமானது பாவத்திலிருப்பவர்களுக்குச் சர்வவல்லவரை குறித்த நடுக்கத்தை உண்டாக்குவதையும் சேர்த்ததே ஆகும்.

தேவனுடைய ஒவ்வொரு கட்டளைகளையும் கீழ்ப்படிவதற்குத் தீவிரமாக இருப்பதினால் மட்டுமே ஒருவரை "பக்திமானாக" கருத முடியாது. நம்முடைய குறிக்கோளானது தேவனுடைய கட்டளை ஒவ்வொன்றையும் அன்பு கூர்ந்து மறுமொழியளித்து, தேவைக்கும் மற்றும் புற எல்லைக்கும் உள்ள வேறுபாடு உண்டுப்பண்ண முயற்சிப்பதல்ல. கீழ்ப்படியாமையின் கொடூரமான விளைவை தவிர்க்கும் விதமாக, தேவனுக்கேற்ற ஆராதனை செய்யத் தொடருவோமாக.

## நடைமுறை

### நாம் பந்தயத்திலிருக்கிறோம் (12:1, 2)

நாம் கிறிஸ்தவ வாழ்வில் சோம்பலாக உலா வர இயலாது; சக்தியும் மற்றும் பொறுமையும் தேவைப்படுகிற பந்தயத்தில் நாம்

இருக்கிறோம். நாம் தேவனை விட்டு வழுவக் கூடும் (2:1), ஆனால் நாம் தேவனை நோக்கி சறுக்க முடியாது; ஆனால் அவரை நோக்கி வளருவதற்கு முயற்சி தேவைப்படுகிறது. "பொறுமை" என்பது விடாமுயற்சி என்று பொருள். நாம் இதைப் பெற்றிருந்தால் நாம் அனைவரும் ஜெயங்கொள்கிறவர்களாக இருக்க முடியும்.

கிறிஸ்தவமென்பது ஓய்வு பெறுகின்ற ஒரு வேலைப் போன்றதல்ல. கிறிஸ்தவர்கள் கர்த்தருக்கு வேலை செய்வதை விட்டு விலகும் எந்தத் திட்டமும் அவர்களுக்குக் கிடையாது. வயது முதிர்ந்தவர்களும் அவர்களால் என்ன செய்ய முடியுமோ அதை செய்ய அனுசரித்துக் கொண்டு தங்கள் வேலையைத் தொடர முடியும். கிறிஸ்தவப் பந்தயத்தில் ஓடுகிறவர்கள் மற்றவர்களுக்கு உதவிச் செய்யும் வழியைக் கண்டுகொள்வார்கள். நாம் மற்றவர்களுடன் பேசுகிற வரைக்கும் அவர்களை மனந்திரும்புதலுக்கு அழைப்பு விட முடியும்.

**நாம் பந்தயத்தில் ஓடுகிறோம் (12:1, 2)**

நாம் வெற்றிக்கு நேராக விசுவாசமாக ஓடுகிறவர்களுடைய தொடர்வரிசையில் இருக்கிறோம் என்பதை மறந்துப் போனால் நம்முடைய பந்தயத்தில் தடுமாறி கிரீடத்தை இழந்துப் போவோம். ஒரு வெற்றிகரமான பந்தய வீரர் தன்னுடைய மனதில் தன்னுடைய இலட்சியத்தையும் வேகத்தையும் வைத்திருந்தால் அவர் இறுதி வரை நிலைத்திருக்க முடியும். கிறிஸ்தவர்கள் எல்லைக் கோட்டில் யாரையும் தோற்கடிக்க வேண்டியதில்லை, நாம் அனைவரும் வேறுபட்ட காலங்களில் நிறைவுசெய்கிறவர்களாக இருக்கிறோம், ஆனால் நாம் நிறைவு செய்ய வேண்டும்.

முதல் முறையாக இந்த நிரூபத்தை வாசிக்கும் கிறிஸ்தவர்கள் சோர்ந்தும் இளைப்படைந்தும் காணப்படுவர். ஒவ்வொருவரும் தாங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்றும், இன்னமும் அதற்காக நற்கிரியை செய்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் மறு உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதன் எழுத்தாளர், "நீங்கள் சரித்திரத்தின் பெரும் பந்தயத்தில் ஓடுகிறீர்கள் என்று சொன்னார். மற்றவர்கள் எல்லாம் ஒன்றினால் மாற்றப்பட்டுள்ளனர். ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தது. நீங்கள் இருக்கிற பந்தயத்தின் மகத்துவத்தை உணர்ந்தீர்களென்றால், இப்படிப்பட்ட ஒரு சந்தோஷத்தை நீங்கள் ஒருபோதும் பெற முடியாது."

பந்தயத்தில் ஓடுகிறவர்கள்; அவர்களைத் தடுக்கிற எல்லாவிதமான தடைகளையும் மற்றும் எல்லாப் பாவங்களையும் நீக்கிப்போட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவைகள் ஒவ்வொருவருக்கும் மாறுபடக் கூடும். தேவன் இருப்பதைவிடச் சிறந்ததால் மாற்றிக் கொள்ளாமல் எதையும் விட்டுவிட விரும்பமாட்டார்.

பந்தயத்தில் எப்படி ஓட வேண்டுமென்று இயேசு நமக்குக் காண்பித்திருக்கிறார். நாம் நிறைவு கோட்டை தாண்டும்போது இயேசு அங்கே நின்றுக் கொண்டு "பிதாவே, இதோ நீர் எனக்குத் தந்த பிள்ளைகளில் சிலர்" (காண்க 2:13) என்று கூறுவார். அந்தக் கனத்தின் மீது கவனம் வைத்திருத்தல் என்பது இயேசு செய்ததைப்போன்று செய்யக் காரணமாக இருக்க வேண்டும். வழியில் இருக்கிறவர்களின் பரியாசங்களினால் வரும் பாடுகளின் "அவமானத்தை இகழ்ந்தாலும்" நாம் யாருடைய பந்தய வீரர்கள் என்பதை அறிந்திருக்கிறப்படியால் நம்முடைய தலையை உயர்த்திப்பிடிக்க முடியும்.

## எல்லா தடைகளையும் ஒதுக்கி வைத்தல் (12:1, 2)

பலவிதமான ஆதாரங்களின் மூலம் தடைகள் வரக் கூடும்: நம்முடைய சொந்த வீட்டிலிருக்கிற நேசிக்கப்படுகிறவர்களால் வரும் எதிர்ப்பு, நம்முடைய வேலையில் இருக்கிற பரிகாசம் அல்லது இடறல்கள், தங்கள் வார்த்தைகள் தீயவையாகக் கொண்டிருக்கிற நம்மைச் சுற்றியுள்ள துன்மார்க்க மக்கள். இவைகள் எல்லாம் உண்மையான பாடுகள். இடங்களில் சாத்தான் தனது பொல்லாத வேலையாட்களைப் பல இடங்களில் வைத்திருக்கிறான், நாம் அவர்கள் இருப்பதைக் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. ஆகவே நாம் எப்போதும் பாதுகாப்போடு இருக்க வேண்டும். நம்மைச் சூழ்ந்திருக்கிற தடைகளை விட்டுவிட்டு, வேறுபட்ட சூழ்நிலைகளையும் அல்லது புதிய நண்பர்களையும் கண்டுபிடிப்போம். இது ஒருவேளை கடினமானதாக இருக்கக் கூடும், குறிப்பாக முதலில் பந்தயத்தில் எப்படி ஓட வேண்டுமென்று கற்றுக் கொள்ளுதல் கடினமாக இருக்கும், ஆனால் தம்முடைய நுகம் இலகுவானது மற்றும் தம்முடைய பாரம் எளிதானது என்று இயேசு வாக்குப்பண்ணியிருக்கிறார் (மத். 11:28-30).

சில சமயங்களில் உபத்திரவங்கள் நமக்குள்ளிருந்தே வருகிறது. "நான் அதிகமான பணத்தைச் சேர்த்திருந்தால் நாம் சோதனைகளில் நிலைத்திருக்க முடியும்" என்று ஒருவேளை நீங்கள் யோசிக்கலாம். நீங்கள் இன்னமும் நீங்களாகவே இருக்க முடியும்! தேவன் நம்மோடு பாதுகாக்கும் அணுகுமுறையில் நமக்கு விசுவாச குறைபாடுள்ளது என்பதை இவ்விதமான பண்பு சுட்டிக்காட்டுகிறது. ஒருவேளை நீங்கள் "நான் இந்தச் சூழலில் இருந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்க முடியும்" என்று நினைத்தால் இதை விட்டு வெளியே வாருங்கள்! தவறான முடிவுகளை எடுக்க அனுமதித்து, தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்துக் கொண்டிருந்தால், பந்தயத்தை மாற்றவோ அல்லது சிறந்ததொரு பந்தயத்தை ஓடவோ உங்களால் முடியாது. நாம் தேவனுடைய வார்த்தையின் அறிவையும் அதற்கு உண்மையாக கீழ்ப்படிவதையும் வளர்த்துக் கொள்ளக் கண்டிப்பாகப் போராட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். ஒவ்வொரு முறையும்

சோதனைகள் காணப்படும்போது தமக்கு உதவிச் செய்யும் வசனங்களை இயேசு மேற்கோள் காட்டினார். அவருடைய முன்மாதிரியை, நாம் பின்பற்றுவோமானால், நம்முடைய தெய்வீக வாழ்வானது சாத்தானுக்குக் கடிந்துக் கொள்ளுதலாக இருக்கும்.

## அவமானத்தை வெறுத்தல் (12:1, 2)

சிலுவை மீதான கொடூரமான பாடுகளுடன் அவமானமும் சேர்க்கப்பட்டதன் மூலம் மிகவும் அதிகரிக்கப்பட்டிருந்தது. தோல்வியடைந்த வீரர்களுக்குச் சம்பவிப்பதைவிட, எதிரியால் தாக்கப்பட்டவர்களின் சில காரியங்கள் மிகவும் சங்கடமாக இருக்கும். இது முற்றிலும் தோற்கடிக்கப்பட்டு மேற்கொள்கிறவருக்குச் சரணடைவதன் ஒட்டு மொத்த அடையாளமாக இருக்கிறது. மேலும், இது ஒருவர் சிலுவையிலறையப்படப் போகிறவருக்குச் செய்யக் கூடியதாகவும் இருக்கிறது. அவருடைய நிர்வாணத்தை அனைவரும் பார்க்கும் இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டார். அவர் பார்க்கிறவர்களின் கண்கள் கூசும் வண்ணம் நிர்வாணமாக வெளிக்காட்டப்பட்டார். சிலர் தனிப்பட்ட சங்கடத்தை உண்டாக்குகிறவர்களின் வெறுப்பைத் தவிர்ப்பார்கள் - ஆனால் இயேசு இதைச் செய்தார், அவர் அவர்களுக்காக ஜெபித்தார் (லூக். 23:34).

கிறிஸ்து “அவமானத்தை ஒரு பொருட்டாக எண்ணவில்லை”; இது அவருக்குச் சிறியதாகப் பொருள்படுத்தியது. சீக்கிரத்தில் பிதாவோடு பரலோகத்தில் கிடைக்கப்போகிற எல்லா மகிழ்ச்சியையும் அவர் எதிர்நோக்கிக் காத்திருந்தார். இடைப்பட்டக் காலத்தில் பரதீசுவில் அக்காலத்து பரிசுத்தவான்களோடு அவர் நிச்சயமாக மகிழ்ச்சியாக இருந்தார். சிலுவையைச் சகிப்பதின் மூலம் அவர் முழுமையான பாடுகளோடே சென்று நம்முடைய விசுவாசத்தின் உச்சகட்ட முன்மாதிரியாக மாறினார்.

## “இயேசுவை கவனித்துப்பார்” (12:3)

நாம் “இயேசுவை கவனித்துப்பார்க்கும்போது,” அவருடைய வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடங்களை நடைமுறைப்படுத்த முடியும். நம்முடைய சோர்ந்துபோன ஆத்துமா தளர்ந்து விடாமல் தடுப்பதற்கு இதை தினந்தோறும் செய்ய வேண்டும். இயேசுவின் பாதையில் பந்தையத்தில் ஓடுவதற்கு சுமக்க வேண்டிய சிலுவையும், செலுத்த வேண்டிய விலைக்கிரயமும் இருக்கிறது, சில நேரங்களில் விலைக்கிரயமானது பொருளாதார ரீதியாகவும் இருக்கலாம். வேலையானது எதிர்பார்ப்பதை கிறிஸ்தவர்களால் செய்ய முடியாது. அநேகமாக சமுதாயமே அந்த விலைக்கிரயமாக இருக்கக் கூடும், ஏனெனில் இயேசுவின் அடிச்சுவடை விட்டு விலகச் செய்யும் நண்பர்களை கிறிஸ்தவர்கள் தெரிவு செய்யமாட்டார்கள்.

கிறிஸ்துவையும் சாதாரண சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொண்டதால் ஒருவர் தன்னுடைய குடும்பத்தாரால் கைவிடப்படக் கூடும்.

"இடுக்கமான வழியில்" தொடர்வதற்கான விலைக்கிரயம் கொடுக்க விரும்பாதவர்கள், இயேசு இந்த பூமியிலிருந்தப்போது தமது பந்தயத்தின் இறுதியில் பெற்ற சந்தோஷத்தைப் பெற முடியாது. வழி நீண்டதாக இருக்கும்போதும், வாழ்வின் போராட்டங்கள் மேலோங்கியதாகக் காணப்படும்போதும், சிலர் "நற்கிரியைகள் செய்வதில் சோர்ந்துப் போகின்றனர்" (கலா. 6:9). நாம் விசுவாசிப்பது இன்னார் என்பதை அறிந்து மற்றும் சுவிசேஷத்தை தற்காக்க ஆயத்தமாக நின்று, இடுக்கண்களின் ஊடே சந்தோஷமாக இருக்க ஆயத்தமாவோம் (பிலி. 1:16; 2 தீமோ. 1:12). தேவன் ஆளுகை செய்கிறார். பாவம், தவறுகள், மற்றும் அறியாமைக்கும் எதிரான இறுதிப் போராட்டத்தில் அவர் ஜெயிப்பார் (வெளி. 17:14).

### "இளைப்புள்ளவர்களாக, இருதயம் சோர்ந்தவர்களாக இருக்க வேண்டாம்" (12:3)

நாம் சோர்ந்துப் போகிற போராட்டக் களங்கள் குறித்து தாமஸ் ஜி. லாங்க் என்பவரால் விவரிக்கப்பட்டிருக்கிறது:

> … கிறிஸ்தவர்கள் இருதயம் சோர்ந்து இளைப்புள்ளவர்களாகிறார்கள். அவர்கள் போராட்டத்தினால் சோர்வடைகிறார்கள், நகரத்திலுள்ள பிரச்சனைகளுடன் போராடுவதால் சோர்வடைகிறார்கள், தேவையிலுள்ள மக்களுக்கு சேவை செய்து நன்றிக் கூட சொல்லாமல் மாறிவிடுபவர்கள் மத்தியில் அவர்கள் சோர்ந்துபோகிறார்கள். … "ஒரு சபைக்காக பொருட்கள் வாங்கித் தரும்" மக்களை சந்திப்பதில் சோர்ந்து போகிறார்கள், தாங்கள் அடிமைப்பட்டிருக்கிற காரியங்களில் போராடுவதில் சோர்ந்துபோகிறார்கள், அடங்கா ஆசைகளை குறித்து சோர்ந்துபோகிறார்கள். தங்கள் ஆசைகளுடன் போராடி சோர்ந்துபோய் கலப்பையைக் கீழே தள்ளிவிட்டு வழியில் இளைப்பாற விரும்புகிறார்கள். இந்த கற்பாறை மைதானத்தை ஏன் வேறொருவர் உடைக்க கூடாது?[57]

தன் எல்லைக் கோட்டித் தாண்டி ஓடி அதன் பின்னர் இளைப்படைந்து மரித்த, ஒரு கிரேக்க ஓட்டப்பந்தய வீரரைப் பற்றிய ஒரு கதை இவ்வாறாக கூறுகிறது - ஆனால் அவன் நிற்பதற்கு முன்னர் தன் எல்லைக் கோட்டை தொட்டுவிட்டான். இயேசுவை பின்பற்றுவதில் நாம் அனைவரும் இதைத்தான் செய்யவேண்டும். முடிவு வரை சகித்திருத்தல் இறுதியான நித்திய இரட்சிப்பின் உறுதியை தருகிறதாய் இருக்கிறது. கிறிஸ்து "சகித்தார்" அவருடைய வெற்றி நம்மை உற்சாகப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

## உபத்திரவத்தை தவிர்த்தல் (12:4)

இந்த எபிரெய நிருபத்தின் அசல் வாசகர்கள் ஒருவேளை சிறுவர்களாக இருக்கக் கூடும், தர்சு பட்டணத்தானாகிய சவுலின் உபத்திரவத்தினால் மரணத்தைத் தவிர்க்க ஓடினவர்களின் பிள்ளைகளே இவர்கள்; (அப். 8:1-4; 9:1; 22:4). 10:32-34 ஒரு பெரும் உபத்திரவம் குறிப்பிட்டிருந்தபோதிலும், இந்த பிரசங்கத்தை கேட்டவர்களுக்கு இரத்தச்சாட்சியாக மரிப்பதின் பயம் இன்னமும் வரவில்லை; ஆனால் 12:4ன் படி இது வரவிருக்கும் சாத்தியக் கூறுகளைச் சுட்டிக்காட்டுகிறது. ஒருவேளை மனிதர்கள் சரீரத்தைக் கொல்லக் கூடும், அதை மட்டும் தான் அவர்களால் செய்ய முடியும் என்பதை இந்த கிறிஸ்தவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது (லூக். 12:4; மத். 10:28). "என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது." என்று (யோவான் 10:28) இயேசு கூறியிருக்கிறார். வெளியிலிருந்து வருகிறவைகளோ அல்லது நம்மிலிருக்கிறவைகளோ நம்முடைய ஆத்துமாவை அழிக்க முடியாது. ஆயினும், கிறிஸ்தவப் பந்தயத்தில் ஓடுவதை நாம் நிறுத்திவிட்டால், நம்முடைய நித்திய ஆசீர்வாதங்களை இழந்து விடுவோம் (கலா. 5:4, 7).

நாம் மக்களுக்கு எதிரானவர்களல்ல ஆனால் "பாவத்திற்கு எதிராக போராடுகிறவர்கள்" என்பதை நம்முடைய மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒழுக்க வாழ்விலும், ஆவிக்குரிய போதனையிலும், விசுவாச துரோகத்தின் கொடுமையான துன்மார்க்கத்தை எதிர்த்து போராட வேண்டும்.

## கிறிஸ்துவிற்காக பாடுபடுதல் (12:4-6)

ஒழுக்கக் குறைச்சலுள்ள சூழலில் வளர்த்தெடுக்கப்பட்டவர்கள், ஒழுங்கு தேவனை அவர்கள் புரிந்துகொள்வது கடினம் ஆயினும் அவர்களுடைய வாழ்வில் அனுபவிக்கும்படிக்கு அவர் அனுமதிக்கிறார். இருப்பினும், இந்த நிருபத்தை பெறுகிறவர்கள் இந்தக் கருத்தை எளிதில் புரிந்து கொண்டிருந்திருக்க வேண்டும்.

போலந்தில், கம்யூனிசத்தின் வீழ்ச்சிக்கு முன்னர் அந்த ஊரைச் சேர்ந்த வாலண்டி டாவிடோ எனும் பெயருள்ள ஒரு சுவிசேஷ பிரசங்கியார் அதிகாரிகளுக்கு முன்னர் அழைப்பிக்கப்பட்டு அவருடைய ஊழியத்தைக் குறித்து விவரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். நீங்கள் போலந்திலுள்ள சபையின் தலைவரா என்று அவர்கள் கேட்டனர். "நான் போலந்திலுள்ள கிறிஸ்துவின் சபைக்கு தலைவரல்ல, கிறிஸ்து தான் தலைவர்!" என்று அவர் தைரியமாக பதிலளித்தார். சாதாரண சுவிசேஷத்தை தொடர்ந்து பிரசங்கிக்க அவர் அனுமதிக்கப்பட்டார். நாம் பாடுபட வேண்டியதாக இருந்தாலும் - தைரியமாக இருந்து "சாந்தத்தோடும், வணக்கத்தோடும்" (1 பேதுரு 3:15) உத்தரவு சொல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும். நாம்

ஆவிக்குரிய வாழ்வின் சத்தியங்களை போதிக்க வேண்டும்: "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12).

தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்கவும், மற்றும் அவரைப் பிரியப்படுத்துவதற்கும் ஏதாவது ஒரு வழியில் நாம் பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் தம்முடைய பிள்ளைகளை சிட்சிக்கிறார், மேலும் இந்த சிட்சையானது மற்றவர்களின் மூலமாக வரக் கூடும். ஒருவர் குற்றம்சாட்டுவதன் மூலம் நம்முடைய உணர்வுகளை காயப்படுத்துகிறவர்களிடமிருந்து நமக்கு கிடைக்கப் பெறுவது என்ன? நம்முடைய வாழ்வில் நாம் விரும்புகிற விதமாக பதிலளிக்கிறவர்கள் நம் வாழ்வின் இலட்சியமாக அல்லாமல், மாறாக தேவன் விரும்புகிற வழியில் பதிலளிக்கிறவர்கள் நமது இலட்சியமாக இருக்க வேண்டும். நம்முடைய காயங்களையும் மற்றும் மற்றவர்கள் காயப்பட நாம் காரணமாக இருந்தாலும் தேவன் நம்மை மன்னிக்க முடியும். கிறிஸ்து "சகித்துக் கொண்டது போல" கண்டிப்பாக நாம் சகித்துக் கொள்ள வேண்டும் (12:3).

### சிட்சையின் நன்மைகள் (12:7-11)

சிட்சை மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது: இது நம்முடைய தவறை திருத்துகிறது, நம்முடைய விசுவாசத்தை பலப்படுத்துகிறது, மேலும் நித்திய நலனுக்கு நேராக நம்மை முன்னேற்றுகிறது.[58] நாம் இந்த வாழ்வில் வெற்றிகரமாக மற்றும் திருப்திகரமாக இருப்பதற்கு நாம் விரும்புகிறதெல்லாம் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை (மத். 6:25-34). நாம் கடிந்து கொள்ளப்படும்படிக்கு ஜெபிக்க வேண்டும், ஆனால் நாம் அதை அபூர்வமாக செய்கிறோம். "நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால்" (ரோமர் 8:26) என்று பவுல் சொன்னதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். நாம் ஆவிக்குரிய ரீதியில் பலப்பட, நமக்கு அவசியப்படாதவைகளென்றாலும், நாம் வளருவதற்கு உதவுகிறவைகளுக்காக ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய சிட்சைக்கு செவிகொடுக்காமல் இருப்போமேயானால், அவர் நம்மை மீண்டும் மீண்டுமாக சிட்சிப்பார்.

பாடுகள் தேவனுடைய கோபத்தின் அடையாளமல்ல என்று கூறுவதில் கிறிஸ்தவமானது உலக மதங்களிலேயே தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஒருவன் தன் தெய்வத்தை பிரியப்படுத்தினால் அவன் உபத்திரவப்பட மாட்டான் என்று பெரும்பான்மையான மதங்கள் போதிக்கின்றன. இதற்கு மாறாக, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளும் உபத்திரவமானது சுத்திகரிக்கிறது மற்றும் பரிசுத்தப்படுத்துகிறது என்று போதிக்கின்றன. வசனம் 11-ல் இதை

"சிட்சை" என்று குறிப்பிடுகிறது. உபத்திரவமானது தேவனிடமிருந்து வருகிற சிட்சை என்று நாம் எப்படி அறிய முடியும்? அப்படி நம்மால் அறிய முடியாது, ஏனெனில் தற்காலத்தில் தனிப்பட்ட வெளிப்பாடுகள் கொடுபடுவதில்லை. சிட்சை போன்றே பிரச்சனைகளும் சாத்தியமான நன்மைகளைக் கொண்டுள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய நலனில் உபத்திரவங்கள் எவ்வளவு கிரியை செய்திருக்கிறது என்பதை சில காலத்திற்கு பின்னர் திரும்பிப் பார்த்து, புரிந்து கொள்ளலாம். நிச்சயமாகவே, ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்பதை நிச்சயித்துக் கொள்ளலாம்.

**தவறான சிட்சை (12:9-11)**

"பிரம்பை தவிர், பிள்ளையைக் கெடு" என்பது வேதாகம சொற்றொடர் கிடையாது, ஆனால் இது சுட்டிக்காட்டப்படுகிறது: "பிள்ளையை தண்டியாமல்விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே" (நீதி. 23:13, 14). பெற்றோர்கள் பகைமை காட்டுகிற அளவிற்கு செல்ல கூடும் ஆனால் வேதம் அதை கடிந்து கொள்கிறது (நீதி. 19:18). நேசிக்கிற பெற்றோர் எப்படி உற்சாகப்படுத்த வேண்டும் மற்றும் எப்படி கண்டிக்க வேண்டுமென்று அறிந்திருக்கின்றனர். சரியாக சிட்சிக்கிற பெற்றோர் மிகுதியான அன்பின் பரிசை தருகின்றனர். சிட்சை குறைபாடானது குற்றத்திற்கு நேராக வழிநடத்தும் மற்றும் தற்கால உலகத்தில் கடமை தவறுதலாகும்.

**"சிட்சை ஆனால் தண்டனையல்ல" (12:9-11)**

கால்வினிய சித்தாந்தத்தை பின்பற்றுகிறவர்கள், "தேவன் தம்முடைய பிள்ளைகளை சிட்சிக்கிறார் ஆனால் தண்டிப்பதில்லை, ஏன் என்றால் அவரால் அப்படி செய்யலாகாது" என்று கூறுகின்றனர். தேவனுடைய அன்பு மற்றும் இரக்கத்தினால் மட்டுமே வாழ்கிற ஒருவர் (ரோமர் 8:33 போல்), சிட்சையானது "வெட்டுண்டு போவதில்" முடியக் கூடும் என்பதைக் காணத் தவறுகிறார் (ரோமர் 11:22). "தேவனுடைய கிருபை அனைத்தையும் மேற்கொள்கிறது" என்று உரிமைகோருவது எபிரெய நிருபத்தின் 6:4-6 மற்றும் 10:26-29 ஆகிய வசனங்களையும் அதன் போதனைகளையும் மீறுகிறது.

தாவீது சாகாதப்படிக்கு அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது, ஆனால் பாவத்தின் விளைவாக வந்த அழிவுகளை அவர் அடைந்தார் (2 சாமு. 12:11-15; கலா. 6:7). அவனுடைய பிள்ளை மரித்துப்போனது, அம்மோன் தாமாரை பழிதீர்த்தான், அப்சலோம் அம்மோனைக் கொலை செய்தான், அப்சலோம் தாவீதை

சிங்காசனத்தை விட்டு விரட்டினான், அதன் பின்னர் அவன் கொலை செய்யப்பட்டான்.

பல உண்மையான பரிசுத்தவான்கள் பெருமளவில் பாடுபடுகின்றனர், உபத்திரவங்கள் முற்றிலும் கீழ்ப்படியச் செய்துவிட்டபடியால் சிலர் தாழ்மையுள்ளவர்களாக மாறிவிட்டனர். உங்களுடைய உபத்திரவ நேரம் வருவதாக இருக்கலாம். சூரியன் நீதிமான்களின் மேல் எப்போதும் பிரகாசிப்பதில்லை; ஒன்றுமறியாதவர்களும், குற்றவாளிகளும் இந்த வாழ்வில் பாடனுபவிக்கிறவர்களாக இருக்கின்றனர். சீக்கிரத்திலோ அல்லது தாமதமாகவோ வசனங்களின் இந்தப் பகுதி எல்லா மனிதருக்குள்ளும் நடைமுறைப்படுத்தப்படும். தேவன் பாவமற்ற ஒரு குமாரனை பெற்றிருந்தார், ஆனால் பாடுகளற்றவராக ஒருவரும் இல்லை.

## மகிழ்ச்சியும் கிறிஸ்தவமும் (12:11)

சில மத குழுவின் உறுப்பினர்கள் கர்த்தரில் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்கள் என்பதைக் குறித்துப் பேசுகின்றனர். அவர்கள் தங்கள் வாழ்வை சந்தோஷமாகவும் கவலையற்றதாகவும் மாற்றிக்கொள்கின்றனர். நிச்சயமாகவே, நாம் “ஆசீர்வதிக்கப்பட” வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் (மத். 5:3-11), அதை சிலர் “சந்தோஷம்” என்று மொழியாக்கம் செய்கின்றனர், ஆனால் இதன் பொருளை வேறுவிதத்தில் மாற்றியிருக்கின்றனர். தங்கள் வாழ்வில் பாரங்கள், கவலைகள், மற்றும் சிட்சையைக் குறித்த எவ்வித அறிகுறியுமில்லாமல், ஒருவர் எப்போதும் சிரித்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்று கூறுவது ஆழ்ந்த சிந்தனையற்ற, மற்றும் தவறான மதமுமாகும். இந்த சிந்தனையின் தாக்கத்தின் கீழ் பல சபைகள், சபை உறுப்பினர்களை சந்தோஷப்படுத்தவும் பலரை ஈர்க்கவும், “நாங்கள் எப்போதும் கொண்டாட்டத்திலிருக்கிறோம்” என்ற கோஷத்தை சேர்த்துக் கொண்டனர். மக்கள் தாங்கள் மகிழ்ச்சியாக இல்லாதபோது மகிழ்ச்சியாக இருப்பதாக நடித்து தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளக் கூடும்.

உண்மையான ஆசீர்வாதமானது நம்முடைய ஆவியில் எளிமையையும், அதின் மேல்; துக்கப்பட்டதையும் அங்கீகரித்த பின்னர் வருகிறது (மத். 5:3, 4). இது நம்முடைய சிலுவையை சுமப்பதைக் கற்றுக் கொண்டபின்னர் வருகிறது (மத். 16:24). நாம் தற்போது துக்கப்பட வேண்டும்: “இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள்” (லூக். 6:25). சில சமயங்களில் தேவனுடைய அனுமதியால் பெறப்படும் எல்லா விதமான சிட்சையினால், சில காரியங்களை குறித்து கொஞ்சம் சந்தோஷப்படக் கூடும். உண்மையில், தவறாகப் பரவும் மாதிரியிருக்கிறது. சில பேர் துக்கமாக தோற்றமளிப்பது பக்தி வாழ்க்கை என நினைக்கின்றனர்,

ஆனால் அதுவும் உண்மையான கிறிஸ்தவம் அல்ல.

"எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்" (எபி. 12:11) என்று இருக்கிறபடியால், நாம் சந்தோஷமாக காணப்படுவது அவசியமென்று நாம் சிந்திக்கிறோம். நாம் நீதியில் பூரணராகக் கூடுமானால், தேவன் நம்மிடமிருந்து இதை எதிர்ப்பார்க்கக் கூடும், ஆனால் ஆவிக்குரிய பெரும் ஆசீர்வாதங்கள் அனைத்தும் தற்காலிக பாடுகளினால் வருகிறதென அவர் அறிந்திருக்கிறார்.

பெரும் சந்தோஷமானது நம்முடைய உபத்திரவங்கள் தேவனிடமிருந்து நன்மையை கொண்டு வருகிறது என்றும், நித்திய சந்தோஷத்தோடு ஒப்பிடுகையில் இது தற்காலிகமானது என்று அங்கீகரிப்பதினாலும் வருகிறது (2 கொரி. 4:16, 17). முதலாவது, நம்மையும் மற்றும் நம்மைச் சுற்றியிருக்கிற உலகத்திலும் ஊடுரவக் கூடிய முற்றிலும் பாவம் நிறைந்த ("மிகுதியான பாவங்களுடன்"; ASV) கிரியைகளில் நாம் வாழ்கிறவர்களாக இருக்கிறோம் (ரோமர் 7:13). இந்த படியில்லாமல், இரட்சிப்பின் சந்தோஷத்திற்கான முன்னேற்றம் நம்முடையதாகாது. மலை பிரசங்கத்தில் மற்ற எல்லாவற்றையும் விட பாக்கியங்களில் "துக்கப்படுதலை" இயேசு முதலில் வைத்ததைக் குறித்து எந்த ஆச்சரியமுமில்லை (மத். 5:4).

கவலைகளாலும் இழப்புகளாலும் துக்கப்படுவதை நாம் பெலவீனமாக எண்ணக் கூடாது. நாம் துக்கப்படுகிறோம், ஆனால் "நம்பிக்கையற்ற மற்றவர்களைப் போலல்ல" (1 தெச. 4:13). தாழ்மையான பிள்ளைகளாக வளருவதற்கு தண்டனையின் வலியை அறிந்து கொள்வது பெலவீனமல்ல. சந்தோஷமானது துக்கப்படுகிறவர்களைத் தொடர்கிறது மற்றும் அதனால் பயிற்சிக்கப்பட்டதன் மூலம் கனியை அறுப்பார்கள்.

பிரச்சனை என்னவென்றால் காரியங்கள் காணப்படுவதுபோன்று எப்போதும் அவைகள் இருப்பதில்லை. எபிரெயரின் ஆசிரியர் தற்போதைய பாடுகள் களிப்பும் கொண்டாட்டமாக மாறிவிடும் என்று கூறவில்லை, ஆனால் இது "சமாதான கனியை" விளைவிக்கும் (12:11). நம்முடைய சோதனையிலும் புடமிடப்பட்ட விசுவாசத்தாலும் ஒரு அமைதியான உத்திரவாதம் வரும். என்னே ஒரு வசந்தக்கால கனி அது! பின்னர் விசுவாசத்தினால் அந்த சமாதானத்தின் மூலம் இடையூறு செய்யும் பிரச்சனைகளைத் தடுக்க முடியும்.

## இந்த உலகத்திலுள்ள மூன்று உறவுகள் (12:14-17)

கிறிஸ்தவர்கள் தொடர வேண்டிய மூன்று மதிப்புமிக்க உறவுகளைக் குறித்து இந்த வசனப்பகுதி கூறுகிறது. முதலாவதாக, *தேவனோடு "சுத்திகரிக்கப்பட்ட"* ஒரு உறவை நாம் கொண்டிருக்க வேண்டும் (வசனம் 14). தேவன் மட்டுமே பூரண பரிசுத்தராக

இருக்கிறார், அதுவே அவருடனான உறவின் சாராம்சமாக இருக்க வேண்டும். “சுத்திகரிப்பு” என்பது “பரிசுத்தம்” என்ற கருத்திற்கு ஒத்திருக்கிறது, இதன் பொருள் என்னவென்றால் “வேறுபாடு” “பிரித்தெடு” அல்லது “முழுமை” என்பதாகும். “பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்” (1 பேதுரு 1:14-15)[59] என்ற கட்டளையானது, வேதாகமத்திலேயே மிகவும் கடினமான கட்டளையாகும். நாம் எப்படி பரிசுத்தமாக முடியும்? நம்முடைய வாழ்வை தேவனுக்கு முற்றிலும் கொடுப்பதின் மூலம் அப்படியாகும்.

இரண்டாவதாக, நாம் *மற்றவர்களோடு சமாதானமாக இருக்கப்* போராட வேண்டும் (வசனம் 14). கிறிஸ்துவிற்கு அப்பாற்பட்டவர்களுடனான உறவானது அவர்களை அவரிடம் கொண்டு வரும் தாக்கத்தை ஏற்படுத்தும் (காண்க ரோமர் 12:18). சண்டையிடுவதற்கு இருவர் அவசியம்; ஆனால் நாம் சமாதானத்திற்காக பணிபுரிந்தால், நாம் சிறு சிறு வாதங்களில் ஈடுபட மாட்டோம். ஒவ்வொரு தலைமைத்துவமும் சமாதானம் குறித்த அக்கறை கொள்கிற குறைந்தபட்சம் ஒரு மனிதனையாவது கொண்டிருக்க வேண்டும். உண்மையில், ஒவ்வொரு மூப்பரும் - மற்றும் கிறிஸ்தவரும் சமரசமில்லாமல் தேவனுடைய சத்தியத்திற்காக நிற்க வேண்டும்; ஆனால் ஒருவர் சத்தியத்தை நேசித்தும்கூட வழிமாறிப்போனவர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்க முடியும்.

மூன்றாவதாக, “ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும் ...” (வசனம் 15) நாம் நம்முடைய *சக கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய* வேண்டும். மற்ற கிறிஸ்தவர்களின் பாரத்தை சுமக்க நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் (கலா. 6:2). தேவனுடைய பிள்ளைகளாக நம்முடைய வெற்றியானது இந்த மூன்று உறவுகளின் மேலேயே சார்ந்திருக்கிறது.

### ஏசா, சீர்கேடான மற்றும் தேவனற்ற மனிதன் (12:15-17)

ஏசா ஒரு தேவனற்ற மனிதன் ஏனெனில் அவன் ஒரு சரீரப் பிரகாரமான ஓய்விற்காக ஆவிக்குரிய கரிசனையை விட்டு விட்டான். எபிரெய கிறிஸ்தவர்கள் அவர்களுடைய உபத்திரவத்தின் மத்தியில் அசௌகரியத்தை தளர்த்திக்கொள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்களை விட்டுவிடும் விளிம்பிலிருந்தனர்.

வெளிப்படையாகவே ஏசா சீர்கேடுள்ளவனாகவும் இருந்தான் (ஒரு “வேசிக்கள்ளன்”; NKJV). அவனுடைய இச்சையானது அவனைத் தொடர்ச்சியாக கீழ்நோக்கிய பாதைக்குக் கொண்டு சென்றது. “விபச்சாரம் செய்யாதிருப்பாயாக” (யாத். 20:14) என்ற தேவனுடைய கட்டளையானது, மோசே சீனாய் மலைக்கு சென்றதற்கு வெகு காலத்திற்கு முன்னரே நடைமுறையிலிருந்தது. எல்லா வகையான

பாலியல் சீர்கேடான செயல்கள் என்று பொருள்படும் "விபச்சார பாவத்தை" வேறு எதுவும் நியாயப்படுத்த முடியாது. இந்த பழக்கத்தை கடிந்து கொள்ளும் வார்த்தை என்பது (πορνεία, *போர்னியோ*) இது எல்லாவிதமான பாலியல் தற்கட்டுப்பாடற்ற, தகாத, மற்றும் ஓரின செயல்கள் மற்றும் திருமண பந்தத்திற்கு அப்பாற்பட்ட உறவுகள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளது. சில மொழிபெயர்ப்புகள் போர்னியோ என்பதை "பாலியல் ஒழுக்கக்கேடு" அல்லது "ஒழுக்கக்கேடு" என்று மொழியாக்கம் செய்கின்றன. அகராதி இதை "கள்ள பாலியல் உறவு" என்று விளக்குகிறது. இது KJV ஆங்கில மொழிபெயர்ப்பில் "வேசித்தனம்" என்று 20 க்கும் மேற்பட்ட இடங்களில் இடம்பெற்றிருக்கிறது. NASB இதை மத்தேயு 5:32ல் "சுய கட்டுப்பாடற்ற" என்றும் மத்தேயு 19:9-ல் "சீர்கேடு" என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

சீர்கேட்டை சிலர் "இரு குழுக்களும் ஒப்புக்கொண்டால்" சரி என்று நியாயப்படுத்துகின்றனர். ஒருவேளை நேர்மையற்ற ஊழியர் வங்கியைத் திருட திருடனுக்கு உதவினால் அது சரியாகாது. வேசித்தனம் நடை பெறுகையில் யாரோ ஒருவர் எப்பொழுதும் ஏமாற்றப்படுகிறார். பவுல் இதை உண்மையென்று பிரகடப்படுத்தினார் (1 தெச. 4:3-8). இதில் எந்த ஒரு தரப்பினரும் காயப்பட்டதாக உணராவிட்டாலும், தேவன் ஒரு நீதியான ஆத்துமாவை இழந்து போகிறார். இதைப் போன்ற பாவம் ஒரு மனிதனை அவனுடைய எஞ்சிய நாட்கள் முழுவதும் முடக்கிவிடும் மற்றும் இராஜ்ஜியத்தில் அவன் அடைய வேண்டிய உயர் ஸ்தானத்தை அடைவதிலிருந்து தடுத்துவிடும். இது தாவீதினுடைய சம்பவம் விவரிப்பது போன்று (காண்க 2 சாமு. 12) ஒருவன் தேவனால் முற்றிலும் மன்னிக்கப்பட்டும் இது உண்மையாக இருக்கிறது. வேசித்தனத்தை ஒரு பாவம் என்று யோசேப்பு அறிந்து போத்திபாரின் மனைவியை விட்டு ஓடினான் (ஆதி. 39:9). பாலியல் பாவமானது தேவனுக்கு எதிரானது, ஒருவருடைய சரீரத்திற்கு எதிரானது (1 கொரி. 6:18), சபைக்கு எதிரானது, ஒருவருடைய திருமணத்திற்கு எதிரானது, மற்றும் இதன் காரணமாக தேவன் விவாகரத்தை அனுமதிக்கிறபடியால் இது பேரழிவான செயல் (மத். 19:9). இது தேச நலனுக்கெதிரானது மற்றும் ஒருவருடைய ஆத்துமாவிற்கே எதிரானது (நீதி. 6:32).[60]

### ஏசா கண்ணீரோடு மனந்திரும்பினான் (12:17)

ஏசா ஒருவேளை கசந்து அழுதிருந்தாலும், அவனுடைய வேண்டுகோளுக்கு பதிலில்லை. இயேசு கெத்செமனே தோட்டத்தில் உதவிக்காக கண்ணீரோடு தேடியபோது (லூக். 22:44), "தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபி. 5:7) இங்கே வேறுபாடு காணப்படுகிறது. இயேசுவின் ஜெபம் கேட்கப்பட்டது

(பதிலளிக்கப்பட்டது). ஏசா மற்றும் இயேசு ஆகிய இருவரும் அழுதனர்; ஜெபத்தைக் கேட்கிறவராகிய சர்வ வல்லமையுள்ள பிதாவினிடத்தில் ஆழ்ந்த மதிப்பு வைத்து இயேசு அப்படி செய்தார், ஆனால் ஏசாவோ தன் சொந்த ஆசைகளுக்காக அழுதான். சில சம்பவங்களில், ஏன் என் ஜெபம் கேட்கப்படவில்லை? என்ற கேள்விக்கு இது பதிலாக இருக்கும் (காண்க யாக். 4:2, 3).

**இடிமுழக்கம், அக்கினி, மற்றும் புயல்காற்று (12:18-21)**

சீனாய் மலையில் பயங்கரமானவைகளும், மற்றும் சத்தங்களும் நிகழ்ந்தது. இனிவரும் நாட்களில் தேவனுக்கு மக்கள் செவிகொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இவைகள் கொடுக்கப்பட்டவையாகும். இடி, அக்கினி, இருள், மற்றும் அக்கினிமயமான சுழல் காற்று ஆகியவை மரணத்திற்கு நெருங்கிய பயத்தை கொண்டு வந்தது. பழைய உடன்படிக்கை “மரணத்தின் ஊழியம்” என்றழைக்கப்படுவதில் ஆச்சரியமேதுமில்லை (2 கொரி. 3:7)! இது மரணம் பாவத்தின் விளைவு ஆகும் என்பதை விளக்கப்படுத்துகிறது. மேலும் இது மோசேயும் அசைத்தது (வசனம் 21).

இந்த இருண்ட மற்றும் வேதனையான அனைத்தையும் தன்னுடைய எபிரெய நிருபத்தின் வாசகருக்கு ஆசிரியர் எழுதுவதின் நோக்கமென்ன? சீனாய் மலைக்கு (அவர்களுடைய முற்பிதாக்கள் மூலமாக) யூதர்கள் வந்ததும் மற்றும் கிறிஸ்துவிடம் வந்த கிறிஸ்தவர்கள் வந்ததுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அவர் காண்பிக்கிறார். ஆவிக்குரிய வாழ்வில் குழந்தையாக இருந்த முந்தைய காலத்தில், தேவன் பாவத்தையும் அதன் விளைவுகளையும் வலியுறுத்தினார் (கலா. 3:19). ஆனால் புதிய உடன்படிக்கை வேறுபட்டது.

பழைய உடன்படிக்கை கொடுக்கப்பட்டதன் வெளிப்புறத் தோற்றமானது, மக்களுக்கு பாவத்தையும் அது எப்படி கிரியைச் செய்கிறது, மற்றும் அதை தவிர்ப்பது எப்படி என்று போதித்து - அதனுடைய நோக்கத்தை பிரதிபலித்தது பழைய ஏற்பாட்டின் பிரதான நோக்கமானது தேவனுக்கு எப்படி கீழ்ப்படிய வேண்டும் என்பதை விவரிப்பதாகும்; புதிய ஏற்பாட்டின் முக்கிய இலட்சியமென்னவெனில் கிறிஸ்துவிற்கு கீழ்ப்படிதல் எவ்வாறு என்பதை காட்டுவதாகும். புறஜாதிகளடங்கிய சபைகளுக்கு “நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது” (கலா. 3:24) என்று பவுல் கூறினார். அது ஒரு திடுக்கிட வைக்கும் உண்மை: தேவனுடைய முதற் தொகுப்பின் மூலம் நாம் கிறிஸ்துவிடம் எப்படி வருவது என்று நாம் கற்றுக் கொள்கிறோம்! உண்மையற்றவர்களுக்கு தேவன் செய்தது என்ன? நாம் உண்மையற்றவர்களாக இருந்தால் அவர் என்ன செய்வார்? என்ற தேவனுடைய அதிசயங்களை பழைய

ஏற்பாடு சித்தரிக்கிறது. நியாயப்பிரமாணமானது அதனுடைய நோக்கத்தில் செயலாற்றலைக் கொண்டுள்ளது, ஆனால் அதை விஞ்சுகிற ஏதோ ஒன்று நம்மிடமிருக்கிறது.

### நம்முடைய தேவன் அதிசயமானவர் (12:18-24)

மலையைச் சுற்றி இருந்த பயங்கர கருமையுடன் கூடிய இடி மற்றும் மின்னல் போன்றவை எந்த ஒரு ஆத்துமாவையும் பயமுறுத்தப் போதுமானதாக இருந்தது. அதிர்வுகளை ஏற்படுத்தும் பூமியதிர்ச்சியானது நிகழ்கையில், மிகவும் பயங்கரமும் மற்றும் அச்சுறுத்தலையும் மக்கள் அனுபவிக்கக் கூடியதாகவும் இருந்தது. எங்கும் செல்வதற்கோ, ஒளிந்து கொள்வதற்கோ, அதை நிறுத்துவதற்கோ எந்த ஒரு முகாந்திரமுமில்லாதிருந்தது. பண்டைய காலத்தில் பூமியதிர்ச்சியானது தெய்வ செயலால் வருவது என்று கருதினதில் எதுவும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஒலிக்கும் எக்காளம், புயல் ஆகியவற்றால் விடப்பட்ட எச்சரிப்பானது ஒன்றும் மலையைத் தொடாமல் பயத்தை உருவாக்குகிறதாயிருந்தது. “நான் பயந்து நடுங்கினேன்” என்று மோசேயும் கூட கூறினார் (வசனம் 21).

இவைகளெல்லாம் ஏன் நடக்க வேண்டும்? தேவனுக்கும் மற்றும் அவருடைய நியாயப்பிரமாணத்திற்கும் உரிய மரியாதையை அளிக்கும்படிக்கும், மக்கள் பாவத்திற்கெதிரான கொடூரமான தண்டனையை மக்கள் அறிந்து கொள்ளும்படிக்கும், அவருடைய கட்டளைக்கு முற்றிலும் கீழ்ப்படிகிற பயத்தை உண்டுபண்ணுவதற்கும் இவைகள் நடந்தது. தேவனுடைய தண்டனையின் பயமானது புரிந்து கொள்ளும்போது அது தாங்கிக் கொள்ள முடியாத இழப்பாக இருந்தது. அநேகமாக இது எல்லாம் அவர்களுடைய வாழ்வின் இறுதிக் காலம் வரை அவர்களை அடக்கி வைக்கும்: மரிக்கும் தருவாயிலிருக்கிற பல நாத்தீகர்கள் தேவனுடைய இருப்பைப் பற்றி தவறான கருத்தைக் கொண்டிருந்ததினால் திடுக்கிட்டு நடுங்கியிருக்கிறார்கள். தங்கள் சொந்த கடினமான சித்தத்தினால் சிலர் மரணம் நெருங்குவதை பார்த்தும், பாவத்திலிருந்து மாறுவதற்கு பல தருணங்களிலிருந்தும் தங்களை கடினப்படுத்திக் கொண்டு தங்களை வஞ்சித்துக் கொண்டார்கள். ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுவது மிகவும் பயங்கரமாக இருக்கும் (10:31).

### நாம் கிறிஸ்துவிடமும் அவருடைய சபையிடமும் வந்திருக்கிறோம் (12:22-24)

காணக்கூடாததும் மற்றும் தொடக் கூடாததும் பயத்தை உண்டாக்காததுமாகிய ஆவிக்குரிய மலையிடம் எபிரெய கிறிஸ்தவர்கள் வந்தார்கள். நாம் தேவனிடம் சேருவதற்கு இனி

ஒருபோதும் பயப்பட வேண்டிய அவசியமில்லை (4:15, 16). நாம் கிறிஸ்துவிற்குள் வந்திருக்கிற மகிமையானது கற்பனை செய்து பார்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. தேவனுடைய இராஜ்ஜியமானது அமைதியானதும், ஆவிக்குரிய பட்டணமாகவும், மற்றும் எக்காளச் சத்தம் இல்லாத இடமாகவும் இருக்கிறது. பரிசுத்தவான்களின் காலங்கள் அங்கு ஒன்று சேருகிறதாயிருக்கிறது, மற்றும் நாம் அவர்களுடன் சேர்ந்து கொள்ளுவோம். இராஜ்ஜியத்தில் பிரவேசித்தவர்களாக, நம்முடைய பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மனிதர்களால் எண்ணக் கூடாத அளவிலான தேவதூதர்களால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்: “அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாயிரமாகவுமிருந்தது” (வெளி. 5:11).

நம்முடைய பெயர்கள் எப்படி எழுதப்பட்டது? காணக்கூடாத தேவனிடம் நாம் எப்படி வந்திருக்கிறோம்? நாம் இயேசுவிடம் வந்திருக்கிறோம், மேலும் தற்போது அவர் நம்மோடிருக்கிறார்; ஆனால் இது விசுவாசத்தின் சங்கதியாக இருக்கிறது. அவருடைய நெருக்கம் குறித்து வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது, எனவே நாம் அதை விசுவாசிக்க வேண்டும். நாம் அறியாமையின் இருளில் வாழாமல் ஒளியில் வாழ்கிறோம். வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவைகளின் மூலம் தேவனையும், இயேசுவையும் அறிவதற்கு அவசியமான எல்லாவற்றையும் நம்மால் அறிந்துகொள்ள முடியும்.

நாம் கிறிஸ்துவிடம் வந்து, அவருடைய பரலோக இராஜ்ஜியமாகிய, சபை எனும் சரீரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியால் இந்த சத்தியமனைத்தும் உண்மையாக இருக்கிறது. நாம் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய பிள்ளைகளானபோது இது நடக்கிறது (கலா. 3:26, 27).

### பரலோகத்தில் பெயர் எழுதப்படுதல் (12:23)

பரலோகத்தில் பெயரெழுதப்பட்ட ஒரு சிலரின் பெயரை பவுல் அறிந்திருந்தார் (பிலி. 4:3). 2 கொரிந்தியர் 12:1-4 ல் அவர் குறிப்பிட்ட தரிசனத்தின் அறிக்கையின் புத்தகத்தில் அவர் அவர்களுடைய பெயர்களைப் படித்திருக்கக் கூடுமோ? பவுல் வெளிப்பாடுகளை வார்த்தையால் பெற்றிருக்கக் கூடும், அல்லது எயோதியாள், சிந்திக்கேயாள் மற்றும் கிளமெந்துப் போன்றவர்களின் குணலட்சணங்களை அவர் அறிந்திருக்கக் கூடும். அவர்களுடைய வாழ்க்கை நடையை அறிந்தபடியால் அவர்களுடைய நித்திய முடிவைக் குறித்து அவர் நிச்சயமாயிருக்கக் கூடும். “மார்டெல் உன் பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது”! என்று பவுல் கூறுவதைக் கேட்பது எவ்வளவு சந்தோஷமானது. நமக்கு அவ்வகையான உறுதி கொடுக்கப்படவில்லை, ஆனால் நாம் சுவிசேஷத்திற்குக்

கீழ்ப்படிந்திருந்தால் (மாற்கு 16:16; அப். 2:38), விசுவாசத்தில் அன்றாடம் நம்முடைய பரிசுத்த வாழ்வை வாழ அர்ப்பணித்திருந்தால், “நமக்கு நித்திய வாழ்வு இருக்கிறதென்று” நாம் அறியமுடியும் (1 யோவான் 5:13).

## இதற்கு மாறாக: கிறிஸ்தவர்களுக்கான ஒரு கொண்டாட்டம் (12:22-24)

புதிய உடன்படிக்கையானது பயத்தை அகற்றி மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது. ஏன்? ஏனெனில் கிறிஸ்தவர்கள் பயத்திலிருந்தும் சீனாய் மலையின் நடுக்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்:

> அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார் (ரோமர் 8:3, 4).

பாவத்தின் அடிமைத்தனத்தைக் குறித்து பிரதிபலிக்கும் வகையில் நாம் மலையடிவாரத்திற்கு *வரவில்லை* (கலா. 4:21-26). மாறாக நாம் பரம எருசலேமாகிய ஜீவனுள்ள தேவனுடைய பட்டணமாகிய சீயோன் மலையிடத்திற்கு *வந்திருக்கிறோம்*. நாம் பரலோகத்தில் பெயரெழுதப்பட்ட, முதற்பேறானவர்களின் சபையினிடத்திற்கும், பதினாயிரக்கணக்கான பணிவிடை ஆவிகளாகிய தேவதூதரிடமும் *வந்துள்ளோம்*. நாம் இயேசுவின் அழைப்பிற்கு மறுமொழியளிக்கும் விதமாக அவரிடம் *வந்திருக்கிறோம்* (மத். 11:28-30; வெளி. 22:17). மகா நியாயாதிபதியாகிய தேவனிடத்தில் வந்து, அவரில் நாம் பாவபாரத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் இளைப்பாறுதலை அடைந்திருக்கிறோம். சபையில் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் பூரணராக்கப்பட்டிருக்கிற எல்லா காலத்திலுமுள்ள நபர்களின் ஆவியோடு நாம் சேர்க்கப்பட்டிருக்கிறோம் (வெளி. 7:13, 14). “நீங்கள் மன்னிக்கப்பட்டீர்கள்! தற்போது நீங்கள் உங்களுக்காக சிந்தப்பட்ட பரிகார பலியாகிய என்னுடைய இரத்தத்தினால் பூரணராக்கப்பட்டீர்கள்” என்று அந்த இரத்தம் கூக்குரலிடுகிறது.

நாம் சபையிலிருக்கிற ஒவ்வொரு ஆசீர்வாதங்களையும் புரிந்துகொள்ளக் கூடுமெனில் ஒவ்வொருநாளும் சந்தோஷத்தின் நாளாக இருக்கும். பரலோக பட்டணத்திற்கு இன்னும் நாம் வந்திராதபோது, இந்த ஆசீர்வாதங்கள் எதிர்காலத்திற்கானவை என்று சிலர் கூறுகின்றனர். ஆயினும் எபிரெய நிருபத்தின் ஆசிரியர் “நீங்கள் வந்து *சேர்ந்தீர்கள்*” (வசனம் 22; வலியுறுத்தல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன) என்று கூறினார். நாம் இந்த பூமியில்

இன்னமும் சரீரத்திலிருக்கும்போதே ஏற்கெனவே பரலோக குடிமக்களாக இருக்கிறோம் (பிலி. 3:20). நாம் நம்முடைய இரட்சகர் தோன்றுவதற்கு ஆர்வமாக காத்திருக்கிறோம், ஆனால் இந்த மகிமையின் கண்ணோட்டத்தைத் தற்போது பெற்றிருக்கிறோம்.

**பேசுகிறவருக்கு புறக்கணிப்பை காண்பிக்க வேண்டாம் (12:25)**

தேவன் பழைய ஏற்பாட்டில் பேசினார்; ஆனாலும் தம்முடைய குமாரன் மூலமாக புதிய ஏற்பாட்டில் அவர் இன்னும் வல்லமையாக பேசியிருக்கிறார் (1:1, 2). புதிய ஏற்பாட்டின் தேவனாயிருக்கிற அதே தேவன் தான் பழைய ஏற்பாட்டின் தேவனாகவும் இருக்கிறார், ஆனால் வித்தியாசமான வழிகளில் பேசியிருக்கிறார். இந்த சொற்றொடரானது கவனத்தை குவிக்கிற மற்றும் எபிரெயரின் முக்கியமான எண்ணமாக இருக்கிறது. 12:25ல் பேசுகிறவர் அடையாளப்படுத்தப்படாவிட்டாலும்கூட, அநேகமாக அவர் தேவனே பேசுகிறார். தேவனிடமிருந்து வரும் ஒரு வார்த்தையைக் கூட நாம் தவிர்க்கவோ அல்லது அவமதிக்கவோ செய்தால் அதன் விளைவு மிகவும் கொடியதாக இருக்கும். முதலாம் நூற்றாண்டில் தம்முடைய பேச்சு மற்றும் எழுத்து மூலம், தம்முடைய ஏவுதல் பெற்ற பேச்சாளர் மூலம் அவர் நம்மை பரலோகத்திலிருந்து எச்சரிக்கிறார். எபிரெய நிருபம் தேவனிடமிருந்து வந்த ஒரு செய்தியாகவே இருக்கிறது; இதன் மூலாதாரத்தை ஏற்காமல் மற்றும் இதன் அதிகாரத்தையும் போதனையையும் ஏற்கமறுக்கும் ஒருவர் நித்திய அழிவிற்குள்ளாவார்.

2:3 ல் "எப்படி தப்பித்துக் கொள்வோம்?" என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான பதில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது: "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்?" (12:25). தேவனுடைய அதிகாரத்தை புறக்கணிக்கிறவர்கள் தப்பிப்பதற்கு வாய்ப்பில்லை - அவர்கள் அழிந்து போவார்கள்.

சீனாய் மலையில் பேசின பயங்கரமான வார்த்தையானது இரண்டாம் வருகையின் போது "இனிகாலம் செல்லாது!" என்று வல்லமையாக அறிவிக்கும், கர்த்தரின் சத்தம் பூமியை அசைக்கும் வல்லமையுள்ளது (வசனங்கள் 26-28). எதிர்கால நியாயத்தீர்ப்பைக் குறித்தும் (9:27), முழு விசுவாச துரோகத்தின் விளைவுகள் குறித்தும் (6:4-6; 10:26-29), மற்றும் "அசையக்கூடிய உலகத்தின்" முடிவு குறித்தும் எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. காலம் நிறைவேறும் போது காணக்கூடிய இந்த முழு உலகம் அழிந்துபோகும் (2 பேதுரு 3:5-7, 10-13). ஒருபோதும் அசைவினால் அகற்ற இயலாத அவருடைய நித்திய

இராஜ்ஜியத்தின் நாம் ஒரு பங்காக இருக்கிறபடியால், தேவனுக்கு நன்றி (12:28).

**நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார் (12:28, 29)**

தேவனுக்கான சரியான ஆராதனை மூன்று வரையரைகளை உள்ளடக்கியுள்ளது: (1) இது தேவன் ஏற்றுக்கொள்ளும் விதமாக அளிக்கப்பட வேண்டும், (2) இது பயபக்தியுடனும், (3) மேலும் "பட்சிக்கிற அக்கினியாகிய" தேவனுக்கு நடுக்கத்துடனும் கொடுக்கப்பட வேண்டும். ஏற்றுக் கொள்ளும் விதமான ஆராதனையைச் செய்ய தேவனுடைய மகத்துவங்களுக்கு நாம் இருதயப் பூர்வமாக அர்ப்பணிக்க வேண்டும். அவரை புரிந்து கொண்டு, சரியாக ஆராதிக்க, நாம் அவருடைய மாறாத பண்புகளை அங்கீகரிக்க வேண்டும்: அவர் நீதியுள்ளவரும் பாவத்தை தண்டிக்கிறவருமாக இருக்கிறார்.

நமக்கு தேவனுடைய கிருபை தொடர்ந்து கிடைக்கிறது என்று கேள்விப்படும்போது நாம் மகிழ்ச்சியடைகிறோம், ஆனால் பிரசங்கியார்கள் நரகத்தின் நெருப்பைப் பற்றிப் பேசினால் அதை அலட்சியம் செய்கிறோம். அப்படிப்பட்ட பிரசங்கங்கள் இடைஞ்சலாகவும், மதிப்பற்றதாகவும், மற்றும் காட்டுமிராண்டித்தனமானதாகவும், புத்திக் குறைவான காலத்தை சேர்ந்ததாகவும் சிலர் நினைக்கின்றனர். இன்றைய காலத்தில் சிலர் அழிவிற்கான தண்டனையானது நித்தியமானதல்ல என்றும் கூறுகின்றனர்.

எபிரெயரின் இந்த வசனமானது நித்திய அக்கினி மற்றும் கந்தகத்திலிருந்து தப்பிக்கும் வண்ணம் நம்மை செயல்பட தூண்டிவிடுகிறது. பாவியை கீழ்ப்படியப் பண்ணும்படி அச்சுறுத்தும் விதமாக நியாயத்தீர்ப்பைப் பற்றியும் நரக அக்கினியைப் பற்றியும் பேசுவது நியாயமற்றதா? அப்படியென்றால், எபிரெய நிருபத்தின் ஆசிரியர் இதைப் பற்றி அறியவில்லை. "அழிக்கும் நெருப்பு" (TEV) என்ற சொற்றொடர் "இங்கேயும் அல்லது 10:27-லும் அக்கினி என்றால் 'புடமிடப்படுதல்' அல்லது 'சுத்திகரித்தல்'"[61] என்று பரிந்துரைக்கவில்லை. இது துன்மார்க்க ஆத்துமாக்களின் அழிவு மற்றும் தொடர்ச்சியான தண்டனை ஆகியவற்றைக் குறித்த சொற்றொடராக இருக்கிறது (காண்க வெளி. 14:11; 20:10; 21:8).

---

இறுதி குறிப்புகள்

[1]பந்தையத்தைக் குறித்த உருவகங்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது; ஆனால் இது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக பவுலின் எழுத்துக்களில் காணப்படுகிறது. (காண்க சங். 119:32; 1 கொரி. 9:24; பிலி. 3:14; கலா. 5:7; 2 தீமோ. 4:7.) [2]F. F. Bruce, *The Epistle to*

*the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 347. [3]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 391. உலகப் பிரகாரமான எழுத்தாளர்கள் சில நேரங்களில் மார்டஸ் என்பதை "கண்கண்ட சாட்சி" அல்லது "பார்வையாளர்" என்ற உணர்வில் பயன்படுத்துகின்றனர். (Josephus *Wars* 6.2.5ல் ஒரு எடுத்துக்காட்டு காணப்படுகிறது.) [4]Ibid., 391. [5]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 519. [6]Neil R. Lightfoot, *Everyone's Guide to Hebrews* (Grand Rapids, Mich.: Baker Books, 2002), 160. பண்டைய காலத்தில் மாரத்தான் ஒரு பொதுவான ஓட்டப் பந்தையமாக இருக்கவில்லை, இருப்பினும் அரங்க ஒட்டமானது 3 மைல் நீண்டிருக்கிறபடியால் சகிப்புத்தன்மையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. (Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 [New York: Doubleday, 2001], 522-23.) [7]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 342. [8]Bruce, 349. இதே போன்ற விவாதம் Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 228 ல் காணப்படுகிறது. [9]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 135. [10]ரோமாபுரியில் முக்கிய குடிமகன்கள் நடைபாதைக்கு நடுவில் ஓடுகிறவர்கள் அவரைப் பார்க்கும் வண்ணம் உட்காருவார்கள்.

[11]Kenneth Samuel Wuest, *Hebrews in the Greek New Testament for the English Reader* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1947), 214. இது "யாரோ ஒருவரின் அதிகாரத்தின் மீது சார்ந்திருப்பது என்று பொருள் தரக்கூடும்" (Koester, 523). [12]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 230. [13]"*பாய்னீர்*" (RSV; NRSV; ISV) "*ஆசிரியர்*" என்பதைவிட சிறந்த மொழியாக்கமாகக் காணப்படுகின்றது (NASB; KJV; NIV). [14]Bruce, 352, 355. [15]Ibid., 352. [16]சியாரோ என்பவர் சிலுவையிலறையப்படுதலை "அவமானத்தின் மரம்" என்று அழைத்தார் (Cicero *Defense of Rabirius* 4.13; Koester, 524 ல் மேற்கோளிடப்பட்டிருக்கிறது). [17]இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப்படவில்லை. [18]Moses Stuart, *A Commentary on the Epistle to the Hebrews* (London: William Tegg & Co., 1856), 505. [19]Lightfoot, *Jesus Christ Today*, 230. [20]காண்க 2 கொரி. 11:25. யாக்கோபை கல்லெறிதலின் தொகுப்பு Josephus *Antiquities* 20.9.1 ல் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவேளை வாசகர்கள் எதோ ஒருவழியில் யூத மதத்தில் ஈடுபாடு கொண்டிருந்தால், அநேகமாக இவர்கள் முன்னர் உபத்திரவப்படுத்தப்படாமல் இருந்திருக்கக் கூடும்.

[21]Wuest, 217. [22]*பைடியோ* (παιδεύω) என்பது வெறும் கட்டளைகளின் தொடர்ச்சியல்ல ஆனால் படிப்பிப்பதின் இலட்சியம் என்று கொயஸ்டர் கூறினார். மேலும் "கடிந்து கொள்ளுதலானது சரீர தண்டயல்ல அது பொதுவான வார்த்தையின் திருத்துதல் என்று கூறினார்" (Koester, 527-28). [23]இந்த எண்ணம் 2 மக்கபேயர் 6:12, 14-16 ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. [24]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 253. [25]Koester, 528. [26]C. S. Lewis, *The Problem of Pain* (Oxford: N.p., 1940; reprint, New York: Macmillan Publishing Co., 1962), 93. [27]Albert Barnes, *Notes on the New Testament: Hebrews to Jude* (London: Blackie & Son, 1884-85; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1985), 300. [28]Dionysius of Halicarnassus *Roman Antiquities* 2.26.2. [29]Arthur W. Pink, *An Exposition of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 930; Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3rd ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 749. [30]Guthrie, 253. [31]G. H. Lang, *The Epistle to the Hebrews: A Practical Treatise for Plain and Serious Readers* (London: Paternoster Press, 1951), 239. [32]NIV மொழிபெயர்ப்பானது சொற்றொடரில் மேற்கோள் குறியை கொண்டிருக்கிறது, ஆனால் NASB கொண்டிருக்கவில்லை. [33]Lightfoot, *Jesus Christ Today*, 234. [34]Stedman, 141. [35]Guthrie, 257. [36]Barnes, 301. [37]Koester, 541. [38]Stuart, 510. [39]Bruce, 365.

[40]Hughes, 539.

[41]Barnes, 303-4. [42]Bruce, 368. [43]James Thompson, *The Letter to the Hebrews*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1971), 171. [44]இந்த வார்த்தையின் பெயர்சொல் வடிவமானது (προσήλυτος, *ப்ரொசிலடோஸ்*) மத்தேயு 23:15 ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையானது *ப்ரோசெர்கோமய்* என்ற வார்த்தையோடு தொடர்புடையது, இதன் பொருள் "அருகில் செல், ஒப்புதல் அளிப்பது" அல்லது "அணுகுதல்." [45]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 392. [46]சங். 20:2; 74:2, 3; 78:68, 69; 132:13, 14; 135:21. [47]இந்த வார்த்தை பன்மையிலிருக்கிறது. ரோமர் 8:29லுள்ள "முதற்பேறானவர்" என்பது கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகிறது. [48]Bruce, 376. [49]டொனால்ட் குத்ரியின் படி, இந்த சூழலில் வியாக்கியானம் செய்வதற்கு அவசியம் எதுவும் கிடையாது, இங்கு சரியாக பொருந்திப்போனலும், "பொதுவான கூடுகையானது பரலோகத்தில் பெயரெழுதப்பட்டது" என்பது இரட்சிக்கப்பட்ட அனைவரையும் சுட்டிக்காட்டுகிறது. (Guthrie, 263.) [50]எடுத்துக் காட்டுகள் *Enoch* 22:9; 41:8ல் காணப்படுகிறது.

[51]இங்கு மேற்கோள்காட்டப்பட்டிருக்கிற பகுதியானது யூத எழுத்தாளர்களால் மேசியாவை குறித்தவை என்று ஏற்கனவே கவனத்தில் கொள்ளப்பட்டது. (Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* [Moberly, Mo.: Scripture Exposition Books, 1992], 231, n. 61.) ரபீமார்களின் ஆதாரங்கள் Leon Morris சான்று பகரப்பட்டுள்ளது, "Hebrews," in *The Expositor's Bible Commentary*, ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1981), 12:145. [52]ஏசாயா 13-ல் பாபிலோனின் வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகிறது ஆனால் பெரும் வல்லமையின் முடிவையும் இது குறிக்கக்கூடும். [53]Reese, 231. [54]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 472. [55]NIV மொழிபெயர்ப்பானது சொற்றொடரில் மேற்கோள் குறியை கொண்டிருக்கிறது, ஆனால் NASB கொண்டிருக்கவில்லை. [56]Bruce, 385. [57]Thomas G. Long, *Hebrews*, Interpretation (Louisville: John Knox Press, 1997), 131. [58]James Burton Coffman, *Commentary on Hebrews* எடுக்கப்பட்டிருக்கிறது (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 293. [59]லேவியராகமம் 11:44, 45; 19:2; 20:7 லிருந்து 1 பேதுரு 1:14, 15-ல் பேதுரு மேற்கோள் காட்டியுள்ளார். [60]Coffman, 300.

[61]Paul Ellingworth and Eugene Albert Nida, *A Translator's Handbook on the Epistle to the Hebrews*, Helps for Translators (New York: United Bible Societies, 1983), 318.